# பொன்னி

PONNI · 10-2-52 · 4 அணா

516



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAR 952
MADRAS



என்ன திகைப்பு?

— 'குமாரி'யில் புளிமூட்டை ராமசாமி



இவர்தான் சாரங்கபாணி என்று சரஸ்வதிக்குச் சுவாமிநாதன் காட்டுகிறார் போலும்!

— 'அந்தமான் கைதி'யில் ஒரு ரசமான கட்டம்!

## ஒரு பரிசு!

கற்பனையுள்ளம் படைத்த நண்பர்கள் நம்மிடையே பலர் இருக்கிறார்கள். அவர்கள் சிந்தனைக்கு வேலைதரும் நோக்கத்தில் ஒரு பரிசுத் திட்டத்தை இப்பொழுது அறிவிக்க விரும்புகிறோம்.

'பொன்னி'க்கு ஆறாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது; புதுப்பகுதிகள் பல இடம் பெற்றிருக்கின்றன; மேலட்டையில் காணும் புதுமையையும் நண்பர்கள் கவனித்திருக்கலாம். அந்த நிழற்படம் சென்னை உயர்நீதி மன்றத்தைக் காட்டுகிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததே! உச்சியில் காணும் கலங்கரை விளக்கம் அதனை உங்களுக்கு விளக்கவில்லையா? அப்படம் உங்கள் உள்ளத்தில் அலை அலையாகக் கற்பனைகளை எழுப்பவில்லையா? அக்கற்பனைகளுக்கு ஒரு வடிவம் தந்து அந்த நிழலோவியத்திற்குப் பொருத்தமான ***தலைப்பு*** ஒன்று வழங்கும்படி உங்களை அழைக்கிறோம். தலைப்பு அதிகப்படியாக நான்கு சொற்களில் அமையலாம். ஒரே ஒரு வார்த்தை கூடத் தக்க தலைப்பாக அமைந்துவிடலாமே!

ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் பெயர், முகவரியுடன் உங்களுக்குச் சரியெனப்படும் தலைப்பை எழுதி அனுப்புங்கள். ***20-2-52***-க்குள் எங்களுக்குக் கிடைக்கும் தலைப்புகளில் சிறந்த ஒன்றுக்கு ரூ. *5.* பரிசு அளிக்கப்படும். அந்தப் பரிசு உங்களுக்கு ஏன் கிடைக்கக்கூடாது? உடனே எழுதுங்கள்.

புகைப்படம்: **சங்கர்.**

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6 | பிப்ரவரி 10, 1952 | இதழ் 1

திருவள்ளுவர் ஆண்டு 1983
தைத்திங்கள் 28-ம் நாள்

| | | |
|---|---|---|
| ஒரு பரிசு | ... | 1 |
| கல் கிடைக்குமா? கனி கிட்டுமா? | ... | 2 |
| மந்திரிசபை அமைப்பு | ... | 3 |
| கோர தாண்டவம் | ... | 7 |
| உயிர் வாட்டும் காலம் | ... | 16 |
| வெறும் கலாட்டா! | ... | 18 |
| மனோரஞ்சிதம் (தொடர் கதை) | ... | 21 |
| பிளாபர்ட் | ... | 25 |
| பொழுது போக்கு | ... | 29 |
| வேடிக்கை என்னே! | ... | 33 |
| தமிழர் நாகரிக விளக்கம் | ... | 36 |
| காதல் கும்மாவி | ... | 41 |
| மலர் மணம் | ... | 47 |
| காகிதப் பூ | ... | 50 |
| என் மதிப்புரைகள் | ... | 58 |

*

**பொன்னி** சந்தா விவரம்: உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறு மாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

# கல் கிடைக்குமா? கனி கிட்டுமா?



# மந்திரிசபை அமைப்பு

சென்னை ராஜ்யப் பொதுத் தேர்தல் முடிவுகள் மொத்தம் 375 ஸ்தானங்களில் 373 ஸ்தானங்களுக்கு வெளியாகிவிட்டன; அதில் காங்கிரஸ் பெற்றிருப்பது 152—மற்ற கட்சிகளுக்கு 221 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. எனவே காங்கிரஸ் ஆட்சி அமைப்பது முடியாத காரியமாகியிருக்கிறது. இந்நிலையில் சென்னை ராஜ்ய மக்கள் கவனமெல்லாம் 'எந்த மந்திரிசபை வாய்க்கும்?' என்பதிலேயே ஒன்றியிருப்பதில் ஆச்சரியமில்லை.

டில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி சென்னை ராஜ்ய நிலைமைப்பற்றிப் பரிசீலனை செய்திருக்கிறது. அங்கே ஏற்பட்ட முடிவின்படி, தற்போதுள்ள காங்கிரஸ் மந்திரிசபை பதவியை விட்டு விலகுவது உறுதியாகிவிட்டது. அடுத்த நிலையிலும் காங்கிரஸ், மந்திரிசபை அமைப்பதில் உற்சாகம் காட்டப்போவதில்லை என்று தெரிகிறது. காங்கிரஸ் எதிர்க்கட்சியாகப் பணியாற்றுவதில் தவறொன்றுமில்லை என்று காமராஜர் கூறியிருக்கிறார். ஆந்திரா காங்கிரஸ் தலைவரும் இச்செய்தியையே உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆகவே காங்கிரஸ் நிலை ஓரளவு தெளிவுபடுத்தப்பட்டுவிட்டதென்றே சொல்லலாம்.

மற்ற கட்சிகளின் நிலையும் சுயேச்சையாளர்களின் நிலையும் இன்னும் தெளிவுபடவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியினரும், பிரஜா கட்சியினரும், உழைப்பாளர் கட்சியினரும், மற்றும் சில சுயேச்சையாளர்களும் காங்கிரஸ் அல்லாத எம். எல். ஏ. க்களை ஒன்று சேர்க்கப் பெருமுயற்சி எடுத்துவருகின்றனர். இந்தச் சட்டசபை மெம்பர்களின் கூட்டமொன்றும் இம்மாதம் 12-ந் தேதி

சென்னையில் நிகழவிருக்கிறது. அக்கூட்டத்தில் இறுதியான ஒரு முடிவு ஏற்படுமென எதிர்பார்க்கலாம்

அதற்கிடையில் காங்கிரஸ்காரர்கள், எதிர்க்கட்சிகளிடையே எதிர்பார்க்கும் 'பிளவுகள்' நேராவண்ணம் தடுக்கும் முறைபற்றியும், ஒற்றுமை நீடித்திருப்பதற்கான வழிவகைகள்பற்றியும் எதிர்க்கட்சித் தலைவர்களும், சுயேச்சையாளர்களும் சிந்திக்கவேண்டும். பதவி ஆசைக்காக இந்தக் கூட்டு உருவாகுமானால், கண்டிப்பாக இக்கூட்டு விரைவில் முறிந்துவிடுமென்பதைச் சம்பந்தப்பட்ட அனைவரும் நன்கு புரிந்துகொண்டிருக்கவேண்டும். இந்தத் தேர்தல் அனுபவங்களே, அவர்கள் ஒன்றுபடத் தக்க அடிப்படைகளை வகுத்துத் தரும் என்பதில் நமக்கு ஐயப்பாடு ஏதுமில்லை.

நடந்துமுடிந்த தேர்தலில் பல உண்மைகள் தெரியவந்தன. பலர் எண்ணியபடி பொதுமக்கள் தேர்தலில் அசிரத்தையாக இருந்துவிடவில்லை. நகர மக்களைக் காட்டிலும் கிராம மக்களே தேர்தலில் அதிக உற்சாகம் காட்டினார்கள். ஆண்களைக் காட்டிலும் பெண்களே ஓட்டுச் சாவடிகளுக்கு அதிகமாக வந்தார்கள். உயர்தர மக்கள், நடுத்தர மக்களைவிட வாழ்க்கையின் கடைசிப் படியில் நிற்கும் உழைப்பாளிகளும், தொழிலாளர்களுமே வாக்களிப்பு நிகழ்ச்சிகளில் அதிக அக்கரை காட்டினார்கள். இவை மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சிக்கு நல்ல அடையாளங்களாகும். இந்த விழிப்புணர்ச்சி, தொடர்ந்து ஆட்சிபுரிவோரைக் கவனிக்குமென்பதைப் புது எம். எல். ஏ. க்கள் மறந்துவிடக்கூடாது.

அடுத்தபடியாக மற்றொரு முக்கிய உண்மை காங்கிரஸுக்கு எதிராக ஏற்பட்டிருந்த உணர்ச்சியாகும். காங்கிரஸ்காரர்கள் சென்னையில் தங்களுக்கு இத்தனை தோல்வி நேரும் என்று எதிர்பார்க்கவில்லை; காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகளும் சுயேச்சையாளர்களும்கூடத் தங்களுக்கு வெற்றி இத்தனை வருமென்று நம்பவில்லை. நிலைமை இப்படியிருந்தும் காங்கிரஸ் ஆட்சி வேண்டாமென்று முழுமூச்சாகத் தீர்ப்பளித்திருக்கிறார்கள், வாக்காளர்கள். இந்தத் தீர்ப்பு, காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரான தீர்ப்பாகும்; காங்கிரஸ் நடத்திவந்த திட்டங்களுக்கு எதிரான தீர்ப்பாகும். இந்த உண்மையையும் புது உறுப்பினர்கள் அலட்சியம் செய்யக்கூடாது.

மேலும் இத்தேர்தலில் பெரிய பெரிய மந்திரிகள், காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், மிராசுதார்கள், பெரும் முதலாளிகள், ஈடு இணையற்ற செல்வாக்குள்ள பெருந்தலைகள் பலபேர் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் பல பெரிய தலை

களைச் சாதாரண தொண்டர்கள் தோற்கடித்திருக்கிறார்கள். மந்திரிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் மிக மிகச் சாமானியர்கள் புறங்காட்டி ஓடச் செய்திருக்கிறார்கள். கள்ளமார்க்கட் செய்தவர்களும், பணபலத்தால் எதையும் விலைக்குவாங்கலாம் என்று எண்ணியவர்களும், நேர்மை என்று ஒன்றிருப்பதாகக் கனவில்கூடக் கருதாதவர்களும் படுதோல்வியடையும் நிலை இத்தேர்தலில் ஏற்பட்டது. நாணயமானவர்களும், நேர்மையாளர்களும், தொண்டர்களும், ஏழை பங்காளர்களும் வெற்றிபெறும் சூழ்நிலையும் இத்தேர்தலில்தான் ஏற்பட்டது. இந்த மகத்தான உண்மையையும் சட்டமன்றம் வந்துள்ள புதியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மற்றொன்றும் உண்டு. காங்கிரஸை எதிர்த்து ராஜ்யம் முழுவதும் போட்டியிடத்தக்க எதிர்க்கட்சி இல்லாத நிலையில் பல கட்சிகள் எதிர்க்கட்சிகளாகப் போட்டியிட்டன; சுயேச்சையாளர்களும் பெருவாரியாகப்போட்டியிட்டனர். இந்நிலையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் காங்கிரஸை எதிர்ப்போரில் யார் வெற்றிபெறக்கூடும் என்பதறிந்து அவருக்காக மற்ற கட்சிகள், சுயேச்சையாளர்கள் ஒத்துழைத்திருப்பது நமக்கு வரும் செய்திகளிலிருந்து நன்கு தெரிகிறது. கம்யூனிஸ்ட்டுகளுக்குச் சோஷியலிஸ்டுகள் ஆதரவளித்திருக்கிறார்கள்! சுயேச்சையாளருக்குக் கம்யூனிஸ்டுகள் ஆதரவு தந்திருக்கிறார்கள்; உழைப்பாளர் கட்சிக்குப் பிரஜா கட்சி உட்பட எல்லா எதிர்க்கட்சிகளுமே ஆதரவு தந்திருக்கின்றன. காமன்வீல் கட்சிக்கும் அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது; ஆந்திராவிலும் மலபாரிலும் பிரஜா கட்சி, கம்யூனிஸ்டு கட்சி ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது. இவ்வாறு காங்கிரஸை எதிர்த்துவென்றோர் யாரும், வெற்றி தங்கள் முழுவெற்றி என்று கூறமுடியாதவகையில், காங்கிரஸ் எதிர்ப்பு சக்திகளின் வெற்றியாகவே, பெரும்பாலான இடங்களில் நடந்துமுடிந்திருக்கிறது. சில இடங்களில் முற்போக்கு சக்திகளுக்குள் மோதுதல் ஏற்பட்டிருக்கலாம். அந்த இடங்கள், ஒத்துழைப்பு ஏற்பட்டிருந்த இடங்களை எண்ணிப்பார்க்கும்போது மிகக் குறைவானவை என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. மேலும் இந்த ஒத்துழைப்பு வளையத்திற்கு தி. மு. க. ஆதரவு தக்க சான்றாக நிற்கிறது. தி. மு. கழகம் தன் உறுதிப்பத்திரத்தில் கையெழுத்திட்டோருக்கு ஆதரவு நல்குவது என்ற அடிப்படையில் தேர்தலில் கலந்துகொண்டது. அவ்வாறு தந்த ஆதரவு யார் யாருக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நோக்கினால், எதிர்க்கட்சிகளிடையே ஒத்துழைப்பு எவ்வளவு சாத்தியமென்பதை யாரும் புரிந்துகொள்ள முடியும். தி. மு. க. ஆதரவு பல சுயேச்சை



௵11, 2DP
N52.6-1

யாளர்களுக்குக் கிடைத்திருக்கிறது; காமன்வீல் கட்சிக்கும் உழைப்பாளர் கட்சிக்கும் கிடைத்திருக்கிறது; ஜஸ்டிஸ் கட்சிக்கும் முஸ்லிம் லீகுக்கும் கிடைத்திருக்கிறது; பிரஜா கட்சிக்கும் கிடைத்திருக்கிறது; கம்யூனிஸ்ட்டுகளின் ஐக்கிய முன்னணிக்கும் கிடைத்திருக்கிறது. இவ்வாறு தி. மு. க. ஆதரவு என்ற சங்கிலியிலேயே இத்தனை சக்திகள் ஒன்றுசேர முடிந்திருக்கிறது. இந்த உண்மையை மனத்தில் கொண்டால் காங்கிரஸ் அல்லாத கூட்டு மந்திரிசபை அமைவது அசாத்தியமல்ல. ஒவ்வொரு கட்சியும் தன் வெற்றி, தன் கட்சி வெற்றி என்று கருதாமல், முற்போக்கு சக்திகளின் வெற்றி என்று கருதவேண்டும்; உண்மையும் அதுதான். சுயேச்சையாளர்களும் தங்கள் வெற்றிக்கு வாய்த்த அடிப்படையை மறந்துவிடக் கூடாது. காங்கிரஸ்காரர்கள் நம்பியிருப்பதெல்லாம் அவர்களைத்தான்! அந்த நம்பிக்கையில் மண்விழும்படி செய்து மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டிய பொறுப்பு சுயேச்சையாளர்களைச் சேர்ந்திருக்கிறது. அப்படியின்றித் தங்கள் சொந்த லாபத்தைக் கணக்கிட்டுக் காங்கிரஸில் சேர்வது அல்லது காங்கிரஸ் மந்திரிசபைக்கு ஆதரவு தருவது என்று அவர்களில் யாரும் முடிவுகட்டுவார்களானால் அந்த முடிவு, நாட்டு நல்வாழ்வுக்கு எத்தனை தீங்குதரக்கூடியது என்பதை அவர்கள் உணராமற் செல்கிறார்கள் என்றுதான் பொருள்! காங்கிரஸ் வீழ்ச்சி தந்த பாடத்தையும் மறந்து தங்கள் வீழ்ச்சிக்கு ஆரம்பம் செய்கிறார்கள் என்றுதான் பொருள்! மக்களுக்குத் துரோகம் செய்து சொந்த லாபவேட்டை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு ஓடுகிறார்கள் என்றுதான் பொருள்!

எனவே சுயேச்சையாளர்களும், காங்கிரஸை எதிர்த்து வாகை சூடிய கட்சியினரும் மேற்குறிப்பிட்ட உண்மைகளைக் கவனத்திற் கொண்டு, கூட்டுமந்திரி சபை அமைக்கும் முயற்சியில் உடனடியாக ஈடுபடுவார்களென நம்புகிறோம். அந்தக் கூட்டு மந்திரிசபை கட்சிக்கு இத்தனை ஸ்தானம் என்ற அடிப்படையில் அமையக் கூடாது. தேர்தல் தந்த படிப்பினைகளை முன்வரியாகக்கொண்டு, மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, கூட்டு உருவாகவேண்டுமென்பதே நம் ஆவல்! சென்னை ராஜ்ய மக்கள் எதிர்பார்ப்பதும் இதுதான்!

காங்கிரஸை வீழ்த்திய சென்னை ராஜ்ய மக்கள், சீர்குலைந்த தங்கள் வாழ்வு சீர்பெறும் என்று புது நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்குத் தக்கவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளவேண்டிய பொறுப்பு வாகைசூடிய வீரர்களைச் சேர்ந்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறோம்.

# கோர தாண்டவம்

மு. அண்ணாமலை

பைத்தியக்காரன் ஒருவனைச் சுற்றிச் சிறுவர்கள் பலர் கூட்டமாகக்கூடி ஆடிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய விளையாட்டில் கல்லுக்குத்தான் முக்கியமான பாகம் கிடைத்திருந்தது. அந்தப் பைத்தியக்காரனை நோக்கிப் பல திசைகளிலுமிருந்து கல்லம்புகள் தொடர்ச்சியாக வந்துவிழுந்தன. அந்தக் கூட்டத்தில் திடீர் திடீரென்று இரைச்சலும் சிரிப்பும் கூடுவதும் குறைவதுமாக இருந்தன. சப்தத்தின் கன அளவு கூடினால் அவர்கள் விட்டெறிந்த கல் குறிதவறாமல் சரியாகப் பிடித்துவிட்டது என்று பொருள்.

அந்தப் பைத்தியக்காரன் ஒரு சொறிபிடித்த நாயைக் கக்கத்தில் பிடித்து அணைத்துக்கொண்டு முழங்காலை மடித்தவாறு குந்தியிருந்தான். அவன் சிறுவர் பட்டாளத்தைக் கண்டு மிரளவோ எதிர்க்கவோ இல்லை. அவன் நாயோடு பேசிக்கொண்டிருந்தான்.

அந்த நாயின் முகத்தைத் தன் முகத்தோடு அணைத்துக்கொண்டு, "என்னடா கண்ணே என்னடா வேணும்...சோறு வேணுமா? இல்லை...ரொட்டிதான் வேணுமா?" என்றான்.

நாய் அதன்மேல் மொய்த்த ஈயை விரட்டுவதற்காக அங்குமிங்கும் திரும்பி வாயைப் பிளந்து குரைத்துக்கொண்டிருந்தது.

"என்னடாவேணும், ஒண்ணும் சொல்லவே மாட்டியா...சொல்லுடா கண்ணே" என்றான் பைத்தியக்காரன். நாய் என்ன சொல்ல முடியும்? பாவம், அந்த நாய் வாய் திறந்து கேட்பதாகவே வைத்துக்கொண்டாலும் என்ன கிடைக்கப்போகிறது! அது பைத்தியக்காரனின் நாயாயிற்றே! பணக்காரனின் நாயாயிருந்தாலும் ரொட்டித்துண்டும் பாலும் கிடைக்கும்; படுக்க மெத்தை கிடைக்கும்.

"பதில் சொல்ல மாட்டியா... அப்புறம் உன்னோடு சண்டை போட்டிடுவேன், பேசவேமாட்டேன்" என்றான் பைத்தியக்காரன் தன் அருமைச் சொறி நாயிடம். இந்த நாடகத்தை வேடிக்கையாகப் பார்த்து விழுந்துவிழுந்து நகைத்துக்கொண்டிருந்தனர் சிறுவர்; அந்த ரசனையில் ஈடுபட்டிருந்த அவர்கள் கொஞ்சநேரம் 'கல்

லெறியும் படலத்தை' நிறுத்தி வைத்துக்கொண்டனர்.

"டேய் டேய், இந்த 'மாசிக்' பைத்தியம் நாயைக்கூடப் பேச வைத்தாலும் பேசவைத்துவிடு வான் போலிருக்கு...கொஞ்சம் பேசாமல் கவனிங்கடோய்" என்றான் ஒரு சிறுவன்.

மற்றொருவன் "பேசுன்னாப் பேசேன்" என்று சொல்லிக் கொண்டே அந்த நாய்மீது ஒரு சிறு கல்லை எறிந்தான். அது 'ளொள்' 'ளொள்' என்று அதன் ஜீவனால் முடிந்த அளவு குரைத்தது. உடனே தான் கேட்டதற்குத் தன் நாய் பதில் சொல்லிவிட்டதாக நினைத்துக் கொண்டு பைத்தியக்காரன் குதிக்க ஆரம்பித்தான். அவன் குதிக்கத்தொடங்கியதும் சிறுவர்களும் சிரித்துக்கொண்டே கற்களை வீச ஆரம்பித்தனர்.

"ஐயோ பாவம், ஏண்டா கற்களை எறிகிறீர்கள்?" என்றான் அவர்களுள் ஒருவன். ஒழுக்க வாதியைப் புறக்கணித்துவிடும் களிமக்கள்போல அந்த இளைஞர்களும் அந்தச் சிறுவன் சொல்லைக் கேட்கவில்லை. விளையாட்டிலும், ஆனந்த மயமான ஆரவாரத்திலும் ஒன்றிவிட்ட அவர்களது பிஞ்சுள்ளத்தில் இரக்கம் துளிர்க்க இடம் இல்லை.

பைத்தியக்காரன்மீது கல்லம்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து தாக்கின. பல குறிதப்பின. சில அவன் காலடியில் விழுந்தன. பைத்தியக்காரன் ஒன்றிற்கும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தன் நாயை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு தலையைக் கீழே தாழ்த்திக்கொண்டான். ஒரே ஒரு சிறு கல் அவனுடைய வற்றிய சொறி நாயின் மீது பட்டபோது அவனுக்குச் சொல்ல முடியாத அளவுக்குக் கோபம் வந்துவிட்டது. பையன்களை எழுந்து விரட்டினான். தட்டுத் தடுமாறிக்கொண்டு நாலா பக்கமும் ஓடினர் சிறுவர்கள். திரும்பவும் பைத்தியக்காரன் தன் இடத்தை அடைந்தபோது எல்லாச் சிறுவர்களும் மறுபடியும் கூடிக் கற்போரைத் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தனர்.

"என்னை அடியுங்கள்; என் நாயை மட்டும் அடிக்காதீர்கள்" என்று பைத்தியம் கெஞ்சிய குரலில் கேட்டதைக்கூடச் சிறுவர்கள் பொருட்படுத்தவில்லை.

"பைத்தியம் உளறுது. பைத்தியம் உளறுது" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் குதித்தனர்.

பைத்தியம் 'ஓ' என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தான். யாரோ ஒரு பையன் எறிந்த கல் சரியாக அவன் மண்டையில் போய்த் தைத்தது. இரத்தம் பீறிட்டது; இரத்தத்தைக் கண்டதும் சிறுவர்கள் "நான் எறியவில்லை, நீதான் அவன்தான்" என்று சொல்லிக்கொண்டே விரைந்து ஓடினர்.

கல்லை எறிந்த பையன் வேண்டுமென்று இதைச் செய்யாததால் எதிர்பாராதது நடந்துவிட்டதைக் கருதிப் பயந்துபோனான். இரத்தத்தைக் கண்டதும் அவன்

உடல் அப்படியே நடுங்கிவிட்டது. 'தன்னை யாராவது கல்லால் எறிந்திருந்தால்.........மண்டை உடைந்து இரத்தம் கசிந்தால்...' என்று தனக்குள் கற்பனை செய்து பார்த்துக்கொண்ட போதுதான் பெரிய பிழையைச் செய்துவிட்டோம் என்பதை உணர்ந்தான்.

"டே மணி, வாடா நீயும் வாடா அங்கே நிற்காதே." என்று மற்றவர்கள் கூப்பிட்டதைக்கூட அவன் கவனிக்கவில்லை.

ஒருசமயம் அவனை ஒரு பையன் அடித்துவிட்டபோது அவன் அழுதுகொண்டே வீட்டுக்கு ஓடித் தன் அண்ணனையும் அப்பாவையும் அழைத்துவந்து அடித்த பையனைப் 'பழிக்குப் பழி'வாங்கியிருக்கிறான். அனாதையான ஒரு பைத்தியக்காரனுக்கு யார் துணையாக வரப்போகிறார்கள்? அது ஒரு பக்கம் அவனது பயத்தை ஓரளவு நீக்கினாலும் இரக்கத்தை மிகுதிப்படுத்தியது.

எல்லாப் பையன்களும் ஓடிவிட்ட பிறகு அவன் மட்டுமே விழுந்துகிடந்த பைத்தியக்காரனைப் பார்த்துக்கொண்டிருந்தான். பைத்தியக்காரன் சிறிது அசைந்தவாறு தலையிலே காயம்பட்ட இடத்தில் கைவைத்துக்கொண்டு மெதுவாக எழுந்திருந்தான். இரத்தம் பட்ட கையை ஒருமுறை பார்த்த போது அவனுக்கே பொறுக்க முடியவில்லையோ என்னவோ, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். மணியனுக்குப் பார்க்கத் துன்பமாக இருந்தது. நேரம் அதிகமாகிவிட்டதாலும் பைத்தியம் கோபத்



தில் ஏதும் செய்தாலும் செய்து விடுவான் என்று நினைத்ததாலும் மணியன் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தான்.

* * *

மணி படுக்கைக்குப் போனதும் கண்ணை மூடிக்கொண்டே கிடந்தான். தூக்கம் வரவில்லை. பைத்தியக்காரனின் நினைவுதான் மீண்டும் மீண்டும் வந்து தாண்டவமாடிக்கொண்டிருந்தது. அவன் தலையிலிருந்து சொட்டிய ஒவ்வொரு துளி இரத்தமும் ஒவ்வொரு பெரிய பூதத்தைப் போல் உருவெடுத்து அவன் கண்முன் தோன்றிற்று. 'அந்தப் பைத்தியக்காரனுக்கு யார் மருந்து போடப்போகிறார்கள்? அவன் என்ன பாடுபடுகிறானோ? பார்த்துவிட்டாவது வரலாம்' என்று தோன்றிற்று. கிளம்பினான். எழுந்து வீட்டுக்குத் தெரியாமல் தனியாகப் போவதற்குப் பயமாக இருந்தது. திரும்பவும் படுத்துக்கொண்டான். ஆனால் தூங்க முடியவில்லை. ஏதோ மாயம் நிறைந்த இரக்க உணர்ச்சி 'வா' என்று கையைப் பிடித்திழுத்தது. பயம் தடுத்தது. கொஞ்சநேரம் படுக்கையில் உட்கார்ந்திருந்தான். அப்பாவின் இருமல் சப்தம் கேட்டதும் மீண்டும் படுத்துக்கொண்டான். அப்பாவின் குறட்டைச் சப்தம் தெளிவாகக் கேட்கத் தொடங்கியபிறகே வீட்டை விட்டுக் கிளம்பினான். அந்த இருட்டில் பைத்தியக்காரனை எங்கென்று போய்த்தேடுவான்? கால் போனபடி நடக்கலானான்.

* * *

அந்த ஊரில் ஒரு பாழடைந்த பிள்ளையார் கோயில் ஒன்றுண்டு. அதனண்டை பரந்து விரிந்த ஒரு பழைய அரசமரம். அந்தக் கோயில் பிள்ளையாரைவிட அந்த அரசமரம் பூர்வீகம் வாய்ந்தது. அந்த அரசமரத்துக்காக ஒரு பிள்ளையாரைக் கொண்டுவந்து யாரோ ஒருவன் 'பிரதிஷ்டை' செய்தானாம். சரியாகச் சொன்னால் அதைப் பிள்ளையார்கோயில் என்று சொல்லக்கூடாது. அது பிள்ளையார் குடிசைதான். அந்தச் சாமி, ஆண்டிகளின் தோழனாகவும், அவரது திருக்குடில் 'திருவோடு'களின் கோட்டையாகவும் விளங்கிற்று. அந்த ஊர்ப் பிச்சைக்காரத் தோழர்களெல்லாம் அங்கே 'ஜாகை' வைத்துக் கொள்ளுவார்கள். ஊருக்குப் புதிதாக வந்து இரண்டொரு நாள் தங்கி ஊரூராய்ச் செல்லும் பிச்சைக்காரர்களுக்கும் அதுதான் 'முசாபரி' பங்களா.

பல இடங்களையும் தேடிவிட்டு மணி அந்தப் பிள்ளையார் கோவிலுக்குத்தான் வந்து சேர்ந்தான். ஒவ்வொருவராக, அவர்கள் மூஞ்சிக்கருகில் குனிந்து குனிந்து பார்த்துக்கொண்டே சென்றான். அவன் அப்படிக் கவனித்ததை எந்தப் பிச்சைக்காரனும் கவனிக்கவில்லை. அவர்களுக்கு என்ன கவலை! இடி இடித்தாலும் அவர்கள் புரண்டு படுப்பார்களே தவிர எழுந்து

உட்காரமாட்டார்கள். திருடர்களும் திரும்பிப் பாராத 'ஜீவசாதி'கள் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர்.



மணி ஒவ்வொருவராகப் பார்த்துவிட்டான். அவர்களிடையே அவன் தேடிய பைத்தியக்காரத் தோழனைக் காணவில்லை. வந்த நோக்கம் நிறைவேறாமல் மணி திரும்ப வேண்டியதாயிற்று. அன்று இரவே எப்படியாவது அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்துவிட வேண்டும் என்று தோன்றியது. அப்படியிருக்கும்போது அவன் எப்படி வீட்டை நாடிப் போகமுடியும்? அவன் எறிந்த சிறு கல்லும், பைத்தியத்தின் தலையிலிருந்து சொட்டிய அந்த இரத்தத் துளிகளும் அவன் கண்முன் மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருந்தன. வீட்டுக்குப் போகாமல் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். சுற்றுமுற்றும் பார்க்கவே பயமாக இருந்தது. அந்த இருட்டில் தனிமை பயத்தைக் கொடுத்தாலும் உறுதிப்பாடு பயத்தை வெல்லப் போராடிக் கொண்டிருந்தது. கண்மூடி விழித்தபோது தூரத்தில் ஒரு உருவம் படுத்திருப்பது தெரிந்தது. ஓடினான்.

ஆம். அவனேதான்!

மங்கிய இருளில் கல்லும் முள்ளும் நிறைந்து கரடுமுரடான நிலப்பாங்கில் காலை முடக்கிக் கொண்டு, வற்றி வரண்ட சொறி நாயின் உயிருள்ள எலும்புக் கூட்டைத் தழுவியபடியே தூங்கிக்கொண்டிருந்தான். அந்தச் சொறிபிடித்த நாய் வாலைச் சுருட்டி மடக்கிக்கொண்டு அவனது மார்போரத்தில் முடங்கிக் கிடந்தது. 'நிராதரவான உலகத்தில் நீதான் எனக்கு ஆதரவு; நான்தான் உனக்கு ஆதரவு' என்று சொல்லிக்கொள்ளுவது போல அந்த இரண்டு உயிர்களும் ஒன்றினை ஒன்று அருகணைத்துக்கொண்டு துயின்றன.

அந்த இரு உயிர்களின் அருகில் மணி அமர்ந்திருந்தான். புத்தர் அசோக மரத்தடியில் அமர்ந்தபோது என்னென்ன தோன்றினவோ அவைதான் மணியின் பிஞ்சுள்ளத்திலும் தோன்றி மறைந்தன. 'ஏன் இந்த உலகத்தில் சில உயிர்கள் மட்டும் சொல்லொணாத துயரங்கட்கு ஆளாகவேண்டும்?' என்று மணி நினைத்தாலும் புத்தர் அதற்கு உருவம்கொடுத்து வெளிப்படுத்தியது போல அவனால் வெளிப்படுத்த முடியுமா?

அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த அந்தப் பைத்தியக்காரனுக்கோ நாய்க்கோ தொந்தரவுகொடுக்க மணிக்கு விருப்பமில்லை. மணிக்கு அந்தப் பைத்தியக்காரனை மீண்டும் கண்ணால் கண்டதே ஒருவாறு ஆறுதலாக இருந்தது. நாளை அவன்பட்ட காயத்துக்கு ஏதாவது மருந்து கொண்டுவந்து போடலாம் என்று நினைத்துக்கொண்டே வீட்டுக்கு நடந்தான்.

* * *

அந்தக் கோயில் மண்டபத்தில் வழக்கம்போல் மறுநாள் காலை பிச்சைக்காரர்களின் மகாசபை கூடிற்று. பண்ணும் கூத்தும் விண்ணை அளாவின. பிச்சைக்காரர்களில் நகைச்சுவை விளங்கப்பேசக்கூடிய சிலர் தங்களுக்குரிய 'டப்பா'த் தமிழில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர். அங்கே அந்தப் பேச்சில் ஈடுபட்டிருந்த ஒரு பிச்சைக்காரன் தான் சேகரித்த சோற்றைத் திருவோட்டில் வைத்து அதை அரசமரத்து ஓரத்தில் மூடிவைத்துவிட்டு வந்திருந்தான். அந்தப் பிச்சைக்காரர்களில் அவன் கொஞ்சம் பொல்லாதவன். கோபக்காரனும் கூட. என்றைக்கும் அப்படி உட்கார்ந்து அந்தக் 'கச்சேரி'யை ரஸிக்காதவன் அன்று என்னவோ விழுந்துவிழுந்து சிரித்துக்கொண்டிருந்தான். அந்தச் சிறு கச்சேரி முடிந்து எல்லோரும் 'தொழிலு'க்குக் கிளம்பியபோதுதான் அந்தப் பிச்சைக்காரன், தான் சேகரித்து வைத்திருந்த சோற்றைப் பார்க்கச் சென்றான். திருவோடு புரண்டு மண்பட்டுக் கிடந்தது. அதிலே இருந்த சோற்றைக் காணவில்லை!

அவனுக்கு வந்த கோபத்தை ஒரு அளவில் வைத்துச்சொல்ல முடியாது. அந்தச் சோற்றை அந்தப் பைத்தியக்காரனின் நாய்தான் தின்றுவிட்டுப் போய்விட்டது. அவர்களுக்கிடையிலே எந்த மனிதத் திருடனும் வருவதில்லை; அப்படியிருக்கப் பைத்தியக்காரனின் சொறி பிடித்த நாய் விடாமல் இப்படிப் பட்ட 'திருட்டுத்தொழிலை' நடத்திக்கொண்டே இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவருடைய உழைப்பில் அது கைவைத்துக்கொண்டிருந்ததால் 'முதலாளித்துவமே உருவெடுத்தாற் போல' வந்த அந்த நாயைச் சும்மா விட்டுவைக்க அவர்கள் விரும்பவில்லை.

"அதோ படுத்திருக்கு பார்... அதைத் தலையடியாய் அடிடா அடி" என்றான் அந்தப் பிச்சைக்காரர்களுள் ஒருவன்.

சேகரித்துவைத்த செல்வம் பறிபோய்விட்ட கோபத்தில் அவன் அந்த நாயின் அருகில் ஓடினான்.

அந்த நாய் தன் வாயிலே ஒட்டியிருந்த ஒன்றிரண்டு பருக்கைகளை நாக்கால் நக்கிக்கொண்டு வாலைச்சுருட்டியபடி படுத்துக்கொண்டிருந்தது. அதன் பக்

கத்திலே ஒரு பெரிய கல் கிடந்தது. வெறிபிடித்த அந்தப் பொல்லாத பிச்சைக்காரன் அந்தக் கல்லைத் தூக்கிக்கொண்டு பல்லை 'நற நற' வென்று கடித்தான்; 'தொப்' என்று கல்லை அதன் தலையில் போட்டான். நாய் 'வீர் வீர்' என்று பயங்கரமான ஓலத்துடன் துடித்தது. சாக்காட்டு ஓலத்தோடு அது தன் வாழ்நாளை முடித்துக்கொண்டது.

அந்த ஓலத்தைக் கேட்டு எங்கோ ஒருபக்கம் திரிந்த பைத்தியக்காரன் ஓடோடி வந்தான். அவனைக் கண்டதும் பிச்சைக்காரக் கூட்டம் ஓட ஆரம்பித்தது. தன் ஒரே துணை இறந்ததைக்கண்டு கொஞ்சமும் தாள முடியாமல் பைத்தியக்காரன் தவித்தான். நாயின் தலையிலிருந்து வழிந்தோடிய இரத்தம் அவன் பைத்தியத்தை அதிகப்படுத்திற்று; வெறி தலைக்கேறிய அவன் பிச்சைக்காரர்களை விரட்டிக்கொண்டு ஓடினான். பிச்சைக்காரர்கள் அவன் கைக்கு அகப்படாமல் ஓடி மறைந்தனர்.

அப்பொழுது மணி அவன் எதிரில் மருந்தும் கையுமாக வந்தான். அந்த ஊரில் இருந்த ஒரு கிழவி சொன்ன பச்சிலையை வீட்டுக்குத் தெரியாமல் அறைத்துக் கொண்டு அதை வைத்துக் கட்டுவதற்காக ஒரு துணியையும் எடுத்து வந்திருந்தான்.

தன் எதிரில் ஓடிவரும் பைத்தியத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கொன்றும் விஷயம் விளங்கவில்லை.

"கொன்னூட்டாங்க, கொன்னூட்டாங்க கொலைகாரப்பசங்கள்" என்று கத்திக்கொண்டே போனான் பைத்தியக்காரன். அவன் தன்னருகில் வந்ததும் மணி அவனைப் பார்த்து, "இதோ இந்த மருந்தைப் போட்டுக்க... நில்லேன்" என்றான். பைத்தியக்காரன் அவன் சொல்லுவதைக் கவனிக்காமல் ஓடினான். மணி அவன் பின்னால் ஓடிக்கொண்டே "நில்லேன். இந்தா மருந்து" என்று கூவினான். சட்டென்று பைத்தியம் நின்றான். அவன் கோபம் அதிகரித்ததோ என்னவோ! திரும்பி மணியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு, "நீதானே என் நாயைக் கொன்றாய்" என்று கேட்டுக்கொண்டே கழுத்தை நெரிக்க ஆரம்பித்தான். மணி திகைத்து 'ஓ' வென்று கதறினான். பைத்தி



யம் தான் பிடித்த பிடியை விடவில்லை.

"நீதான்......விடமாட்டேன். உன்னைக் கொல்லப்போகிறேன்..." என்று பைத்தியம் கூவினான். மணி கத்தமுடியாமல் மயங்கிக் கீழே சாய்ந்தான். பச்சிலை மருந்தும் துணியும் சிதறி மண்ணில் வீழ்ந்தன.

பைத்தியம் மணியை விட்டு விட்டு நாய் கிடந்த இடத்திற்கு ஓடி, இரத்தம் தோய்ந்து நாறிக்கிடந்த நாயைத் தன் கழுத்தின் மீது போட்டுக்கொண்டு ஆடஆரம்பித்தான். கலிங்கத்துப் பரணியிலே வரும் பேய்கள் போர்க்களத்திலே பிணக் குவியலைக் கண்டு ஆடுவதைப்போல மிகவும் கோரமாக இருந்தது. அந்தப் பயங்கரத் தாண்டவம் சிறிது நேரத்தில் முடிந்தது. பைத்தியக்காரன் நாயை அருகே இருந்த 'புண்ணிய தீர்த்தத்தில்' தூக்கி எறிந்துவிட்டு நடந்து கொண்டிருந்தான். எங்கே செல்கிருனே, யார் கண்டார்கள்!

* * *

மணி மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது, தான் மருத்துவ சாலையில் கிடப்பதைக் கண்டான். தன் அருகே அண்ணு அப்பா எல்லோரும் நின்று கொண்டிருந்தனர். கண்ணை விழித்ததும் தாய் ஓடிவந்து கட்டிப் பிடித்துக்கொண்டாள்.

"அம்மா, அந்தப் பைத்தியம் எங்கேம்மா?" என்றான்.

"அந்தப் படுபாவி எங்கே தொலைஞ்சானே, நீ சும்மா படுத்துக்க..." என்றாள் தாய்.

"அம்மா, அந்தப் பைத்தியத்தையும் அழைச்சாந்து மருந்து போடம்மா" என்றான் மணி.

"பேசாமல் சும்மா படுத்துக் கடா" என்று அப்பாவின் அதட்டலான குரலைக் கேட்டவுடன் மணி சும்மா படுத்துக் கொண்டான். தாய் விசிறிக் கொண்டிருந்தாள். மணியின் உள்ளம்மட்டும் பைத்தியக் காரனை நினைத்துக் கதறிக் கொண்டிருந்தது.

### ஆடும் மாடும்

நண்பர் டி. கே. சீனிவாசன் எழுதிவரும் இத் தொடர்கதை அடுத்த இதழில் அவசியம் இடம்பெறும். இந்த இதழிலும் சென்ற இதழிலும் சில எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் அந்தக் கதையைச் சேர்க்க முடியாமற் — போய்விட்டது. —

List of 1st Prizewinners of P. No. 2. (1) P. D. Lukhose, S. Travancore (2) P. C. S. Nambiar, N. Malabar & (3) S. N. Gupta, Kanpur. In addition 26 persons are awarded 3rd prize and 11 the 5th Prize.

**Full particulars are published in the Rainbow dated *10–2–52***

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 4

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

**AMBAL'S PUZZLES**

KEY S. NO. 2 • 2 to 17 = 38

| | | | |
|---|---|---|---|
| 10 | 8 | 7 | 13 |
| 17 | 3 | 4 | 14 |
| 5 | 15 | 16 | 2 |
| 6 | 12 | 11 | 9 |

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 2 on 2-1-52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

V. Ramamurthy
Agent, Madras
29-1-52

முடிவு தேதி 27–2–52 விடை 12–3–52

பிரவேசக் கட்டணம்: கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**74**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 11 முதல் 26 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 74 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:—

# AMBAL PUZZLE NO. 4

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21



# உயிர்வாட்டும்



சூல்கொண்ட கருமேகம் மலைஉச்சி தாவும்!
தோகைமயில் பூப்புதரில் துணையோட டங்கும்!
பால்கொண்ட தாய்மடியை இறுகணைக்கும் குட்டி
பசுமூங்கில் தேனடையைச் சிதைத்துண்ட மந்தி
மால்கொண்ட கடுவன்வால் பாம்பென்றே அஞ்சும்!
மரக்கிளையில் கருங்குயில்கள் வாய்பொத்தி நிற்கும்!
வேல்கொண்ட குறத்தியரின் விழிகண்ட வேடன்
மெய்மறக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

கூடடையும் இளம்பேடை ஆணின்வழி பார்க்கும்!
குளித்துடலை அழகுசெய்யும் ஓடையிலே சிட்டு!
பூடடையும் வண்டினங்கள்! புதரடையும் மான்கள்!
பொழுதடையும் செவ்வானில்! ஒளியடங்கும் மேற்கில்!
ஆடடையும் பட்டியிலே! அழகடங்கும் பூவில்!
அடர்காட்டில் இருளடங்கும்! ஒலியடங்கும் தோப்பில்!
காடடையும் இருள்திரையுள்! கண்ணடையும் சோர்வு!
கவலைதரும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

படைநலியச் செய்கின்ற யானைகளைப் போலக்
குளம்விட்டுப் பாய்ந்துவரும் எருமைகளின் கூட்டம்!
நடைமெலிய இடைஇல்லாப் பெண்கள்சாய்ந் தாடி
நடந்துவரும் நீர்மொண்டு! நடந்துவரும் அந்தி!



# காலம்!

வாணிதாசன்



பெடைமெலியக் காணாத ஆண்கிளிகள் வீட்டுப்
பெருஞ்சுவரின் பொந்தடையும்; கொம்படையும் சிட்டு!
கடைமெலிய என்கால்கள் நடந்தலுத்துப் போகும்!
கருத்தழிக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

நீரடங்கும் ஏரியிலே! நிழலடங்கும் தன்னில்!
நீள்கழுத்துப் பெருநாரை கோரையுள்ள டங்கும்!
காரடங்கும் தொடுவானில்; இருள்தாவும் கீழ்வான்!
கண்ணடிக்கும் ஒன்றிரண்டு விண்மீன்கள் வானில்!
ஏரடங்கும் கொட்டகையில்! கன்றடங்கும் தூம்பில்!
இறைப்பினிலே அணிலடங்கும்! கூடடங்கும் சேவல்!
கூரடங்கும் விழிகளிலே! மனப்போர் அடங்கா!
குடிகெடுக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

குளத்தினிலே தாமரையின் குதிப்படங்கும்! தக்கைப்
பூண்டிலைகள் காம்படங்கும்! அலையடங்கும் நீரில்!
களத்தினிலே பிணை அடித்த பண்ணடங்கும்! வாய்க்கால்
கரையடங்கும் நீர்ப்பாம்பு! மரமடங்கும் நொள்ளை!
தளத்தினிலே குதித்தாடும் நிலாக்கூட்டம் பெண்கள்!
தாழ்வாரத் துள்ளடங்கும்; கையடங்கும் பிள்ளை! • •
உளத்தினிலே மகிழ்வடங்கும்! நினைவடங்கும் தோளில்!
ஊரடங்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!





# வெறும்  கலாட்டா!

## ஒரே வழி

ரெவரெண்ட் ஸ்டோன்லிகர்க் என்ற ஸ்பானிஷ் பாதிரியார் ஒருசமயம் லண்டனில் நடந்த சோஷலிஸ்ட் கூட்டத்தில் பேசும்படி அழைக்கப்பட்டிருந்தார். அன்று அக்கூட்டத்தில் அறிஞர் ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவும் கலந்து கொள்வாரென்று அறிவிக்கப்பட்டிருந்தது. பாதிரியார் தைரியமாகவே வந்தார். அவரே முதலில் பரமனைப் பார்க்கப் பத்து வழிகள் என்னும் பொருள்பற்றிப் பேசினார். அதற்கு மறுத்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் பெர்னார்ட்ஷாவுக்கு ஏற்பட்டுவிட்டது. மக்கள் அவரைப் பேசும்படி வற்புறுத்தினார்கள். பெர்னார்ட்ஷாவும் எழுந்தார் பேச.

"பரமனைப் பார்க்கப் பத்து வழிகள் என்று பாதிரியார் சொல்லுகிறார். ஆனால் ஒரே வழி மூலம் மூலவனை நாம் காண முடியும். அதற்குச் செலவும் ஒரு ஷில்லிங்குதான். அருகிலிருக்கும் ராம்பார்ட் தோல் பதனிடும் தொழிற்சாலைக்குச் சென்றால் அங்கே நேர்மையுள்ள தொழிலாளியைப் பார்க்கலாம். அவனிடத்தில்தான் நான் அவர் குறிப்பிடும் பரமனைப் பார்க்கிறேன்"

பாதிரியார் மீண்டும் மறுப்புரைக்கவில்லை.

'பத்து வழிகளில் ஏற்படும் பணச் செலவு ஷா காட்டுகின்ற வழியில் ஏற்படுவதில்லை. மேலும் பாதிரியைப் பின்பற்றினால் மண்டியிடவேண்டும் ஆலயத்தில். பிணத்தை அடக்கஞ்செய்ய வேண்டுமென்றால் கூடச் சர்ச்சுக்கு வரிப்பணம் அழவேண்டும். தொழிற்சாலைப் பரமனைக் காணும்போது நேராக நிமிர்ந்து சென்று தைரியமாகப்பேசலாம்,' என்று லண்டன்வாழ் மாந்தர் எண்ணினரோ என்னவோ...... ஆனால் பாதிரியார் எண்ணியிருப்பார். அன்று ஷாவுக்காகக் குறைந்த பட்சம் மூன்று மணி நேரமாவது 'ஸ்பெஷல்' பிரார்த்தனை நிகழ்த்தியிருப்பார் என நம்புகிறோம்.

'நேராக மூக்கைத் தொடுவதற்குப் பதில் தலையைச் சுற்றித் தொடுகிறாயா? நேர்வழி இருக்கக் குறுக்கு வழிஏன்?' என்றெல்லாம் நம்மவர்கள் சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஆனால் நேர்வழியை நம் நாட்டில் பின்பற்றுகிறார்களா என்றால் அதுதான் இல்லை. நாம் மட்டுமென்ன, பொதுவாக திடீரென்று ஏற்படும் ஒரு மயக்கம் அல்லது ஆச்சரியத்தின் காரணமாக நேரிடையாக

யாரும் அடிப்படையை கவனிப்ப தில்லை. அப்போதெல்லாம் அடிப் படையை மறைத்து வைத்திருப் பவர்கள் வெற்றியே பெற்று வருகிறார்கள், இன்று காங்கிரஸ் இன்னும் வெற்றி பெற்று வரு வது போல. அடிப்படைத் தவறையோ அல்லது தந்திரத் தையோ புரிந்து கொண்டால் அதுவே நமக்கு வெற்றியாகுமா என்பதுதான் புரியாத பிரச்னை. இதை விளக்குவது போலச் சமீபத்தில் சுவிட்சர்லாந்தில் ஒரு சின்னக் கூத்து... ஆமாம் சீட்டுக்கட்டுக் கூத்து நடந்திருக் கிறது.

*　　*　　*

சுவிட்சர்லாந்து சிங்கார புரு ஷர்களின் சீஷன் சொர்க்கம். பொழுது போக்கப் புறப்பட்டு வரும் குபேரர்கள் ஆண்டுக் கொருமுறையோ அல்லது அடிக்கடியோ அங்கே கூடுவார் கள். விதவிதமாக உடை உடுத் திக் கொண்டு, குடித்து ஆடு வார்கள். பிரியப்பட்டவர் களோடு கூடி மகிழ்வார்கள். விளையாட்டுக்களும் நேரத்திற் கொன்று, நினைப்பிற்கொன்று என்று பலவிதமாக நடந்து கொண்டிருக்கும். சாதாரண மாகச் சீட்டு விளையாடுவதைவிட யாராவது சீட்டுக்கட்டைக் கை யில் வைத்துக் கொண்டு ஏதா வது வேடிக்கை செய்து கொண் டிருந்தால், அவர்கள் அதை ஆரவாரஞ் செய்து ஆதரிப்பார் கள். இதை அனுசரித்து அங் குள்ள ஹோட்டல்களில் கூத்து, கும்மாளங்கள் நடந்து முடிந்த பிறகு இடைவேளைகளில் ஏதா வது ஒரு திடீர்ப் புரொபஸர் அண்டச் சாடுகளைக் கயிறுகத் திரித்து அவர்கள் முன் வீசுவார். அதில் முக்கிய பங்கு வகிப்பது சீட்டுக்கட்டுத் தான்.

இப்போது ஏறக்குறைய இரு பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி நடந்து கொண்டிருக் கிறது. இக்காலத்தில் ‘மாஜிக்’கை ரசித்தாலும், யாரும் நம்பு வதில்லை. ஆனால் சுவிட்சர் லாந்தில் நடந்த கூத்து மிகவும் பிரமிப்பை உண்டு பண்ணுவதா யிருந்தது.

புரொபஸர் கையில் சீட்டுக் கட்டை வைத்துக் கொள்வார். கும்பலில் இருப்பவர்கள் ஆளுக் கொரு சீட்டு எடுத்துக் கொள்ள வேணடும். பிறகு கட்டைத் தூர எறிந்து விட்டு எல்லோருடைய சீட்டுக்களையும் மேஜைமீதுவைக் கச் சொல்லுவார். எல்லோரும் வைத்துவிட்டுப் போய்விடுவார் கள். அவரது மந்திரக்கோலைத் தூக்கி “பிரபுக்களே, பெரு மாட்டிகளே! நீங்கள் எல்லாம் ஒரே மாதிரியான சீட்டையே எடுத்திருக்கிறீர்கள். இதோ பாருங்கள்”

“ஹா... ஹா... ஆமாம். எல் லோருக்கும் ஒரே சீட்டு. ஆடுதன் ஒன்பது! அது எப்படி முடியும்?” அது தான் மாஜிக், மெஸ்மெரி சம்!

இதோ இன்னொரு டிரையல்! மீண்டும் அதே புரோசீஸரில் புரொபஸர் செல்வார். மறுபடி யும் ஆஹாஹா ஆச்சரியங்கள்

அஹ்ஹஹ்ஹா மகிழ்ச்சிகள்! என்ன புரொபஸர்! என்ன மகிழ்ச்சி!

ஒரே நேரத்தில் ஒன்பது பேர் சீட்டு எடுத்தார்கள். ஒரே ஒரு சீட்டு அனைவரது கையிலும். இப்போது நாற்பது பேர் எடுத்தார்கள். ஒரே சீட்டு மீண்டும்... கடைசிச் சோதனை ஐம்பத்தொரு பேர்கள் எடுத்தார்கள். ஒரு சீட்டுத்தான் எல்லோரிடமும்! என்ன ஆச்சரியம்! அதைவிடப் பெரிய 'பைசாக் கோபுர—ஆச்சரியம்' என்னவென்றால் எஞ்சியுள்ள புரொபஸர் கையிலிருக்கும் சீட்டும் அதே சீட்டுத்தான்.

இப்போவாவது புரிகிறதா? இது தான் மாஜிக். நமக்குப் புரிகிறது. சீட்டுக்கட்டுப் பூராவும் அந்த 'ஒரு சீட்டுத்' தான் இருந்தது என்பது சுவிட்சர்லாந்து செல்லும் பிரபுக்களுக்குப்புரியவில்லையாம். பக்கத்திலே நிற்பது மனைவியா அல்லது மகளா என்று கூட அப்போது அங்கிருக்கும் குளிரிலும் போதையிலும் உணர்ந்து கொள்ள முடியாமல் தத்தளிக்கும் அவர்களுக்கு இந்தச் சீட்டுத் தந்திரம் எங்கே தெரியப் போகிறது? இதைத்தான் பிரமாதமாகப் பீத்தினார்கள். புரொபஸர் பல் துலக்குவதிலிருந்து இரவு படுக்கைக்கும் போகும்வரை அவரைப் பலவாறு நிற்கவைத்துப் படுக்கவைத்துப் படம் பிடித்துப் பக்கம் பக்கமாகப் போட்டுமகிழ்ந்தார்கள். ஆனால் புரொபஸர் செய்த வேலையை ஸ்கவுட் குரூப்பைச் சேர்ந்த சிறுவன் வெளிப்படுத்தி விட்டான். அதற்குப் பிறகுதான் எல்லோரும் சீட்டுக் கட்டை வாங்கிப்பார்த்து 'உண்மை'யைத் தெரிந்துகொண்டார்களாம். பிறகு அவர்கள் சந்தோஷம் உச்சநிலையை அடைந்துவிடவே புரொபஸரும் மறுக்காமல் அவர்கள் அன்போடு அளித்த 'பூட்ஸ்—மரியாதை'யை வாங்கிக்கொண்டாராம்!

இந்தச் சீட்டுக்கட்டு உண்மையைப் போலத்தான் இப்போது நம் நாட்டில் 'தேர்தல் அரசியல்' இருக்கிறதென்று நமது அரசியல் ஆரூடக்காரர் கூறுகிறார். எல்லாக் கட்சியினரும் ஜனங்களிடம் தங்கள் பிரதாபங்களைக் கூறினார்கள். ஓரளவு வெற்றியும் பெற்றார்கள். காரணம்? எல்லோருக்கும் அடிப்படை ஒன்றுதான். அதாவது காங்கிரஸ்ஆட்சி ஒழிய வேண்டும். ஆனால் அதே நேரம் நல்லாட்சி அமையுமா என்று யாரும் விளக்கம் கூறவில்லை. அந்த அடிப்படையை நாமும் புரிந்து கொண்டால், அதுவே நமது நல்வாழ்விற்கு வழிகாட்டுவதற்காக நம் முன்னால் நிற்கும் ஒரே வழி என்று என்று நாமும் தெரிந்து கொள்ளலாம்.

'மனமே இனியாகிலும் மயங்காதே—இந்தத் தேர்தல் தலைவர்களை நம்பி மாயாதே' என்று பாடினால்தான் ஏதாவது கிடைக்கும் என்று பிச்சைக்காரர் எண்ணும் நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே நம் ஆவல்!

—நாஞ



# மனோரஞ்சிதம்

தங்கமணி

## 1. வேரடியில் சீறிநின்ற விஷப்பாம்பு!

சிறுவர் தொடர் நாவல்

இளங் காலை. நாலரை மணி!

கீழ்த்திசை வெளுத்தது; காரிருள் தேய்ந்தது; பனி மூட்டம் சிலுத்தது; கடுங் குளிர் ஒடுங்கியது; வான வெளியில் பறவையினங்கள் ஊமையாய் நீந்திப் பறந்து உலாவின; கொக்குப் பண்ணை சாரை சாரையாகப் பறந்து போயின; கண் மலர்ந்த மனிதர்கள் முக்காடிட்டு நடமாட ஆரம்பித்தனர்.

பனியைத் தழுவிய குளிர் காற்று, ஏழடுக்கு மாளிகைக்குள் எட்டுக் கம்பளிகளுக்குள் பதுங்கிக் கிடக்கும் பணத் தொந்திகளிடம் தம் பஜனை பலிக்காததால் குந்தக் குடிசையின்றி, கட்டக் கந்தையின்றிப் பாதையோரங்களில் முடங்கிக் கிடக்கும் பஞ்சைகளிடம் தம் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. பாவம், ஏழைகளின் ஒட்டிய உடலை—ஒடுங்கிய உயிரை—வாட்டி வதைக்க ஆரம்பித்தது!

வறியவரை வாட்டி நடுக்கும் இப்பேர்ப்பட்ட வாடைக்காற்றிலும் கூட, தமிழ்நாட்டின் மாஜி கல்வி மந்திரியார் குமாரலிங்கம் பிள்ளை கிணற்றடிக்கு வந்தார். வேலைக்காரி பொன்னம்மா தன் தோள் புடைக்க, கிணற்றிலிருந்து வாளி வாளியாக நீர் முகர்ந்து அங்கிருந்த ஒரு பெரிய தொட்டியில் நிரப்பி வைத்திருந்தாள். குமாரலிங்கம் நீர்த்தொட்டியண்டை வந்தார். பற்கள் கிடுகிடுக்க, தேகம் தடதடக்கத் தொட்டியிலிருந்த நீரை வாரிவாரித் தலையில் கொட்டிக்கொண்டார். குளிரின் கொடுமையைச் சகிக்க முடியா



மல் அவசர அவசரமாக மேல் மாடிக்கு ஓடோடியும் வந்தார். அவருடைய அருமை மனைவி சாமந்தியம்மாளும் தலைக் குளித்து விட்டு, ஈரம் பாய்ந்த கூந்தலை வாரிச் சுருட்டி முடித்துக்கொண்டே மேல் மாடிக்கு வந்தாள். இருவரும் பூஜை அறைக்குள் நுழைந்தார்கள். வேலைக்காரி பொன்னம்மாளின் கை வண்ணத்தால் பூசை அறை ஒளிவெள்ளமாய்ப் பிரகாசித்தது! வாசம் மிகுந்த சந்தணப் புகைச்சுருள்கள் அறை முழுவதும் கம கமக்கச் சுழன்றன. நிச்சலனமான அமைதி!

எந்த ஓவியனோ அருமையாய் எழுதி, எந்த அச்சகத்தாரோ அழகாக அச்சிட்டிருந்த ஒரு படத்திற்கு—அதாவது 'முருகக் கடவுள்' படத்திற்கு — பயபக்தியுடன் பூமாலையை எடுத்துச் சூட்டினாள் சாமந்தியம்மாள். குமாரலிங்கம் வாசனை வர்த்திகளைக் கொளுத்தி வைத்தார். ஓர் ஏழைக்கு ஒரு வேளை உணவுக்காகும் நாலணாவுக்கு வாங்கிய கற்பூரத்தைக் கொளுத்தினாள் சாமந்தியம்மாள். குமாரலிங்கம் தேங்காயைக் கணக்காக இரு பாதியாக உடைத்துவைத்தார். ஓரிரண்டு நிமிட நேரத்து ஆராதனைக்குப் பிறகு இருவரும் அந்த 'முருகக் கடவுளை'ப் பார்த்தார்கள். இருவரின் கண்களும் கண்ணீர்க்குளமாயின. கல்லுங் கரையக் கையெடுத்துக் கும்பிட்டு வேண்ட ஆரம்பித்தார்கள் அவர்கள்.

அந்தச் சமயம் பார்த்து ஓர் திடீர் அலறல்!

"அய்யோ!... எசமான்! எசமான்... ஆ!"—கீழ்க் கட்டிலிருந்த வேலைக்காரி பொன்னம்மா திடீரெனக் கூச்சலிட்டாள்! அமைதி சூழ்ந்த அந்த நேரத்தில் அவளுடைய திடீர்க் கூச்சல் பேரிடி போலிருந்தது! அவளின் கூச்சலைக்கேட்டு குமாரலிங்கமும், சாமந்தியம்மாளும் திடுக்கிட்டார்கள், மறுகணமே அவசர அவசரமாக அந்த 'முருகக் கடவுளை' மறந்துவிட்டுப் பங்களா வராந்தாவுக்கு ஓடோடியும் வந்தார்கள்.

"அய்ய்...யோ!...எசமான்...அங்கே பாருங்களேன்!..."—பங்களா வாசலுக்குச் சற்று தூரத்தில்—பங்களா சுற்றுப்புற மதிற் சுவரின் வாயிலுக்குப் பக்கத்தில்–செறிந்து செம்மையாக வளர்ந்து கிடந்த மனோரஞ்சிதச் செடிகளின் அடியில் சுட்டிக்காட்டிக் கூவிக் கதறினாள் பொன்னம்மா. குமாரலிங்கமும், அவர் மனைவியும் மிகுந்த பரபரப்புடன் மனோரஞ்சிதப் புதரடியில் பார்த்தார்கள்.

அங்கே—அதாவது, மனோரஞ்சிதப் புதருக்கடியில், பிசுபிசுக்கும் பனி மழையில் நனைந்து நடுங்கியபடி கிடந்தது—ஓர் அழகிய பச்சிளம் பெண் குழந்தை! ஆ!...அந்த அழகிய குழந்தையின் பக்கத்தில் மனோரஞ்சிதச் செடிகளின் வேரடியில் சீறிநின்று படம் விரித்து ஆடிக்கொண்டிருந்தது, கொடும் விஷம் படைத்த ஒரு பாம்பு! வெண்ணாகம்! அய்யோ!........

குமாரலிங்கம் பிள்ளைக்கு எல்லாச் செல்வங்களும் அரைகுறையாக இருந்தாலும், அதைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டுக் கொண்டதில்லை. ஆனால், அவர் பேரைச் சொல்ல ஒரே ஒரு குழந்தைச் செல்வம் மட்டும் இந்த ஐம்பதாம் வயது வரையில் இல்லாமற் போனதுதான் அவருக்குப் பெருங் கவலையாக—ஏன், அவர் உயிரையே உருக்கியெடுப்பதாக—இருந்தது; இருந்து வந்தது! அதற்காகக் குமாரலிங்கமும், அவர் மனைவியும் ஏதேதோ மாயமெல்லாம் பண்ணினார்கள்; என்னென்னவோ மந்திரமெல்லாம் செய்தார்கள். அவர்கள் போகாத கோயில்களில்லை! முழுகாத குளமில்லை! வேண்டாத கடவுள்களில்லை! இப்படியாக நாளொரு கோயிலிலும், பொழுதொரு கடவுளையும் என்னதான் முண்டியடித்து வேண்டிக்கொண்டும், கடந்த பல ஆண்டுகளாக ஒரு பலனும் ஏற்பட்ட பாடாய்க் காணோம்! எப்படி ஏற்படும்?



கடைசி, கடைசியாக, இரும்புநெஞ்சம் படைத்த எந்தக் கடவுளும் தமக்கு இரக்கம் காட்டாமல் போகவே, 'முருகக் கடவுளை' விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு உயிர் தேய வணங்கிவந்த சமயத்தில்தான், "அய்யோ, பாம்பு!..." என்று அலறினார் குமாரலிங்கம்!

"தெய்வமே, குழந்தை...!" என்று கதறினள் சாமந்தியம் மாள்!

"அட, விதியே!..." என்று பதறினள் பொன்னம்மா!

அவர்களுடைய முக்கூட்டு முகாரி கீதங்களைக்கேட்டு, அந்த விஷப்பாம்பு அக்குழந்தையைக் கொத்திப் பிடுங்காமல்—தொட்டுக் கூடப் பார்க்காமல்—சரசரவென்று மனோரஞ்சிதச் செடிகளுக்கடியில் புகுந்தோடி மறைந்தது!

அதன்பின் — எல்லோரும் ஓடினர்கள்!

"அய்யோ, என் செல்வமே!..." என்று கூவித் தாவியோடிக் குழந்தையைப் பூப்போல வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்ட குமாரலிங்கம், சிறிது அச்சமுற்றுச் சுற்றுமுற்றும் பார்த் தார்.

குழந்தைக்குச் சொந்தக்காரராக யாரும் காணேம்!

"அடி, என் அழகரசி!..." என்று தன் கணவரிடமிருந்த குழந்தையை மலர்போல வாங்கி மார்போடணைத்துக்கொண்டு, அதற்குள் கொஞ்சிக்குலாவ ஆரம்பித்துவிட்டாள், பாவம்! பிள்ளைப்பேறில்லாத சாமந்தியம்மாள்!

அப்புறம் எல்லாம் நலமாகவே நடக்க ஆரம்பித்தன.

ஏறக்குறைய இருபது, இருபத்தைந்து ஆண்டுக் காலமாக குமாரலிங்கத்தையும், அவர் மனைவியையும் உருக்கிக் கருக்கிவந்த குழந்தையில்லாக் குறை, இன்று குழிவெட்டிப் புதைக்கப்பட்டது! குமாரலிங்கம் ஊர்க்கோடியில் இத்தனை நாளும் சீண்டுவாரற்றுக் கிடந்த பாழடைந்த முருகன் கோவிலைப் புதுப்பித்துக் கட்டும் பணியில் தீவிரமாக முனைந்தார். சாமந்தியம்மாள் சனீஸ்வரன் கோவிலிலுள்ள பாம்புக் கோயிலைச் சிறப்பிக்க ஆவனசெய்ய ஆர்வ முடன் ஈடுபட்டாள். அவர்கள் மனம் குளிர்ந்தது!

குழந்தை கிடைத்த இருபத்தெட்டாம் நாள், வெகு தடபுட லாக நடந்த பெயர்சூட்டு விழாவின்போது, மனோரஞ்சிதச் செடியடியில் கிடைத்ததால் 'மனோரஞ்சிதம்' என்ற அழகிய பெயர் சூட்டப்பெற்றுத் தங்கக்கட்டிலில் தங்கமாய் வளர ஆரம் பித்தது அந்தப் பெண் குழந்தை!

ஆமாம், அந்த மனோரஞ்சிதச்செடியடியில் இந்த மனோரஞ் சிதம் எப்படி முளைத்தாள்?...

[தொடரும்]

பிரெஞ்சு நாவலாசிரியர்

# பிளாபர்ட்

'ஆனு'

மாடம் போவரி கதையும்.
கதை விளக்கமும்.

எம்மா போவரி ஒரு வேளாளனின் மகள். அக் குடியானவன் சிறிது செல்வவளம் உள்ளவன். அவனது ஒரே மகளைப் பட்டினத்திற்கனுப்பிக் கல்விபயிற்றுவித்தான். அவள் இசைக்கலை, நடனக்கலை முதலியவற்றில் மிக ஈடுபாடுடையவளாக இருந்தாள். ஒரு நாள் அவள் வீட்டிற்குச் சார்லஸ் என்ற சிற்றூர் மருத்துவன் ஒருவன் வரநேர்ந்தது. அக் குடியானவனின் காலிலே ஏற்பட்ட பெருங்காயத்தை ஆற்றுவதற்காக வரவழைக்கப்பட்டான். நாற்பத்தியாறு நாட்கள் சார்லஸ் மருத்துவம் செய்த பின் நோயாளி நலமடைந்தான். சார்லஸை அத்துணை கெட்டிக்கார மருத்துவன் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் எப்படியோ நலம் வாய்த்தது. அதன் பயனாக அக்குடியானவன் இல்லத்தில் சார்லஸ் அடிக்கடி வருவதும் போவதுமாக இருப்பதற்குத் தடையேதும் இலதாயிற்று. அவ்வாறிருக்கையில் எம்மாவோடு பேசும் வாய்ப்புக்கள் சார்லஸை மேலும் மேலும் வந்து செல்லுமாறு தூண்டின. எம்மா சார்லஸை விரும்பினாளில்லை. என்றாலும் திருமணம் என்ற எல்லைக் கோட்டிற்கு வருவிக்கப்படுகின்றனர். விருப்பம் இல்லை என்றாலும் அப்போது சார்லஸின்மீது அவளுக்கு வெறுப்பில்லாத காரணத்தால் திருமணத்திற்குத் தடையொன்றும் நிகழவில்லை.

திருமணத்திற்குப் பின் ஏன் இந்தத் திருமணத்திற்கு உடன்பட்டோம் என்ற நிலைக்கு வந்துவிடுகிறாள். அவள் தன் மேசைமீது கிடந்த திருமண இதழை மீண்டும் கண்ணால் காணக் கூட விரும்பவில்லை. அதைத் தூக்கி நெருப்பில் எறிந்து விடுகிறாள். வெறுப்பின் எல்லை அவ்வளவு தூரம் சென்றுவிட்டது.

அவள் கணவனால் அவளைத் திருப்தி செய்ய முடியவில்லை—திருப்தி செய்யத் தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தனக்கு ஒரு அழகான இளம் மனைவி வாய்த்திருக்கிறாளே, அவளை எப்படித் திருப்திப்படுத்த வேண்டும் என்பதை அவன் ஒருபொழுதும் சிந்தித்ததில்லை. அவனுக்குக் கொஞ்சிக் குலவிவிளையாட நேரமும் இல்லை. அவனுக்கு எப்போதாவது மகிழ்ச்சி வந்தால் ஓட்டோட்டமாக ஓடிவந்து அவள் முதுகிலே ஒரு முத்தம் கொடுத்துவிட்டு ஓடிவிடுவான்.

அவனது தொந்தி செறிந்த வயிறு, பருமனான உடல், அழுக்கேறிய நகங்கள், அலங்காரமற்ற கர்நாடக உடைகள் இவையத்தனையும் எம்மாவின் வெறுப்பை மேலும் மேலும் தூண்டி வளர்த்தன.

சார்லஸ் குடும்ப வாழ்வைப் பற்றிக் கவலைப்படாதவன். ஆணும் பெண்ணுமாக வாழும் வாழ்க்கையைப்பற்றி ஆராயும் திறன் இல்லாதவன். அவன் மனிதன் என்ற முறையில் மாசு மருவற்றவன்; கணவன் என்ற முறையில் குறைபாடு மிக்கவன்.

இந்நாவலில் பிளாபர்ட் ஒரு ஆண்மகன் மண வாழ்க்கையில் எவ்வாறு தோல்வியடையக் கூடும் என்பதை விளக்கிக் காட்டுகிறார். எதைத் தெரிந்து கொண்டிருந்தாலும் தெரியாவிட்டாலும் ஒரு கணவன் தன் மனைவியைப்பற்றி முழு அறிவும் உடையவனாதல் வேண்டும். தன் மனைவி எப்படிப்பட்டவள், எவ்வெவற்றில் ஈடுபாடு காட்டுகிறாள் என்பன போன்றவற்றைத் தெரிந்துகொள்ளாத ஒருவன் வாழ்க்கையில் தோல்வி உறுவான் என்றால் அதில் வியப்பிருக்க இடமில்லை. அப்படிப்பட்ட சில பல நுணுக்கங்களை அங்கங்கே நிகழ்ச்சிகளாய்க் காட்டிக்கொண்டு செல்வதால் நாவல் கதை நிகழ்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு படிப்பவர்களுக்குச் சோர்வு தரலாம்.

சார்லஸ் பதினைந்து வயதுச் சிறுவனாக இருக்கும் போதே அறிமுகப்படுத்தப்படுகிறான். அவன் விநோதமான பேர்வழி, உலகமறியாத அப்பாவி, பள்ளியில் படிக்கும் போது அவன் யாரோடும் பழகுவதில்லை. தன் தாயாருக்குக் கடிதம் எழுதும் போது சிவப்பு மையால் எழுதுவான். இப்படி ஆசிரியர் காட்டிச் செல்லும் சிறு விபரங்கள் சார்லஸின் குணச்சித்திரத்தை உருவாக்க நின்றுதவுகின்றன.

முதலில் எம்மா தன் கணவனோடு நலமாக வாழவேண்டும் என்றுதான் முடிவு செய்திருந்தாள். அப்படித்தான் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தாள். ஆனால் ஏமாந்தாள். அவன் இரவில் பத்து பதினொரு மணிக்கு வீடு திரும்பினான். அதுவரை விழித்துக் கொண்டு காத்திருந்தாலும், வந்தவன் களிப்பூட்டும் பேச்சுக்களில் ஈடுபடாமல் இன்னின்னாருக்கு இன்ன மருந்து கொடுத்தேன், இன்னாருக்கு நலம்என்று அறிக்கை கொடுக்கத் தொடங்கி விடுவான். அவற்றையா அவனிடம் அவள் எதிர்பார்த்தாள்? இப்படி ஆகாதவற்றைப் பேசிக் கொண்டிருந்து விட்டு உண வருந்துவான்; உண்டபின் உண்ட மயக்கத்திலே உறங்கி விடுவான்.

எம்மா சார்லஸிடம் பலமுறை பாடிக் காட்டியிருக்கிறாள். தனக்கு மிக நன்றாக வரக்கூடிய பாடல்களை அவனுக்கு முன்னிருந்து பாடிக் காட்டி உருகுவாள். ஆனால் அவன் உருக மாட்டான். ‘நன்றாகப் பாடினை’ என்று சொல்லித் தட்டிக் கொடுக்க, ஊக்குவிக்க அவனுக்குத் தெரியவில்லை. அவளோ அவனிடம் அதை எதிர்பார்த்தாள்.

சார்லஸ் போன்ற கணவன் வாய்த்திராமல் அவள் விருப்பத்

திற்கேற்றபடி கணவன் வாய்த்திருந்தால் எம்மாவும் ஊர்புகழ ஒரு பத்தினித்தங்கமாக வாழ்ந்திருத்தல் கூடும்.

ஒரு நாள் சார்லஸின் மருத்துவசாலை மனைக்கு ரொடால்ஃபு என்னும் ஆடம்பரப் பேர்வழி ஒருவன் தன் பணி ஆள் ஒருவனின் சிகிச்சைக்காக வந்திருந்தான். அவன் அப்போது எம்மாவைப் பார்த்து அவள் அழகில் ஈடுபட்டான். இப்பேர்ப்பட்ட அழகி இந்தத் தடியனுக்கு மனைவியாக வாய்த்திருக்கிறாளே என்று வியப்படைந்தான். அந்த வியப்பில் அடங்கிய உண்மை அவனுக்குத் துணிவையும் அவளை எளிதில் அடையும் வகையையும் செய்து தந்தது. அவனுக்குப் பெண்களை எப்படி வசப்படுத்தலாம் என்பது தெரியும். அவன் ஒரு களிமகன். அவனுக்கு முன்னதாகவே ஒரு திரைப்பட நடிகையோடு தொடர்புண்டு. என்றாலும் அவன் எம்மாவையும் அடைய விரும்பினான். எம்மா அவனிடம் மயங்கினாள். இரவுவேளையில் தன்னந்தனியாக வீடுதேடி நடக்கவும் அவள் தயாராகியிருந்தாள். அவளது கணவனுக்குக் காட்டத்தெரியாத சுகத்தையெல்லாம் அவன் காட்டிவைத்தான். அருகே அமர்ந்து அவளுக்குத் தலைவாரி விட்டான்.

இப்படி அவள் ரொடால்ஃபோடு சிலகாலம்வாழ்ந்தாள். அந்தப் பெண் வேட்டைக்காரனான



“உங்கள் பிறந்த நாளைக்குப் பாடுகிறேன். கேட்கிறீர்களா?”

“அன்றைக்காவது நான் சந்தோஷமாக இருக்கலாம்னு நினைக்கிறேன்.”

ரொடால்ஃபும் அவளைக் கைவிட்டு விட்டான்.

அந்த வருத்தத்தில் நோய்வாய்ப்பட்டு மனமுடைந்து கிடந்தாள் எம்மா. நாள் பல சென்றன. பாவ வழியிலிருந்து விலகி விடுபட வேண்டும் என்று தான் விரும்பினாள். அவளைத் தேடி இரண்டாவது காதலனாக லியான் என்னும் இளைஞன் வந்து சேர்ந்தான். வழக்கியல் கலையில் பட்டம் பெற்று ஊர் திரும்பியவன். படிக்கும்போதே எம்மாவைத் தேடி வீடு சென்றான். எம்மா மட்டும் தனியாக இருந்தாள். அந்தச் சந்திப்பில் அவன் தன் காதலை வெளிப்படுத்தத் தயங்கவில்லை. எம்மாவோ எந்தவிதமான காதலுணர்வும் கொள்ளவில்லை.

“இருவரும் நண்பர்களாகவே எப்பொழுதும் இருப்போம். காதலர்களாக வாழவேண்டாம்” என்றாள் எம்மா.

“இல்லை. அப்படிச் சொல்லக் கூடாது” என்றான் லியான்.

“நீ இளைஞன்; உன்னைப் பலர் காதலிப்பார்கள். எனக்கு ஆண்டுகள் பல சென்றுவிட்டன” என்று அவள் முழுதும் சொல்லி முடிக்கவில்லை.

“உன்னைப்போல் அழகுள்ள” என்று சொல்லிக்கொண்டே தன் இரு கைகளையும் விரித்துத் தன்னுள் அவளை அடக்க விரும்பினான். அவனிடம் தலையெடுத்தாடிய வெறியுணர்ச்சி அவளிடம் அடங்கிக்கிடந்த வெறியை உரங்கொடுத்து எழுப்பியது. எம்மாவும் உடல் வெறிக்கு ஆட்பட்டாள். தன்னை அவனுக்கு ஆக்க ஒப்பினாள்.

“நேரமாகிறது...நாளை பார்த்துக் கொள்ளுவோம்”

“நாளை எங்கே சந்திக்க?” என்று கேட்டான் லியான் வெறியடங்காத ஆவலுடன்.

“மறந்தும் வீட்டுக்கு வர வேண்டாம்” என்றாள் எம்மா எச்சரிக்கையாக.

“பின்......”

“மாதாகோயிலில் சந்திப்போம்” என்றாள் எம்மா.

இப்படி அவர்கள் சந்திப்பு ஒன்றாகிப் பலவாகிற்று. ஊரார் பழிச்சொல் ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாது திரிந்தாள். விரும்பியபடி ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவு செய்து தீர்த்தாள். அவளது கணவன் அவளைப்பற்றி எந்தவிதமான ஐயமும் கொள்ளவில்லை. களியாட்டத்திற்குப் பணம் தேவைப்பட்ட போதெல்லாம் கணவனுக்குத் தெரியாமல் கடன் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கினாள். தீராத பணத் தேவையில் திண்டாடினாள். லியானும் கைவிட்டு விட்டு நழுவினான். இக்கட்டான நிலையைக் கணவன் அறியாமல் சமாளித்துக்கொள்ள விரும்பினாள். தன் முதற் காதலனிடம் சென்று பணத்திற்காகக் கை நீட்டினாள். அவனும் அவளைத் திருப்பி அனுப்பிவிடுகிறான். இந்த நிலையில் அவள் சாவதைத் தவிர வேறு வழியைக் கொள்ள நினையாமல் நஞ்சுண்டு இறந்து விடுகிறாள். தன் மனைவி இறந்ததைக் குறித்து சார்லஸ் மிகவும் வருந்துவதை நினைக்கும்போது சார்லஸின்மீது ஒருவகையான பரிதாபம் ஏற்படுகிறது. சில நாட்களுக்குப்பின் தன் மனைவியின் கோணல்வாழ்வு அவனுக்குப் புலப்படுகிறது. சார்லஸால் அதைத் தாங்கமுடியவில்லை. அந்தக் கவலையில் உயிர்விட்டு விடுகிறான்.

அவர்களது ஒரே பெண் குழந்தை கதியற்று ஏங்கியது. அதற்கென மிஞ்சியது 12 பிராங்குகளேயாகும். ஒரு ஆலையில் போய்க் கூலி வேலைசெய்து பிழைக்க வேண்டிய நிலைக்கு அப்பெண் குழந்தை விடப்பட்டது.

# பொழுது போக்கு

ராதா

## அம்மா

மகனுக்காகவே வாழ்ந்து, அவன் சுகமே தன் சுகமெனக் கருதி, அவன் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு, அவனுக்காகத் திருடவும் செய்து, முடிவில் தன்னையே தியாகம் செய்து கொள்ளும் ஒரு தாயின் சோகக் கதைதான் 'அம்மா'. தாயின் தியாகத்தையும், தாய்க்கும் தனயனுக்கும் உள்ள அன்புப் பிணைப்பையும், ஆடம்பர வாழ்க்கையால் அளவுக்குமீறிச் செலவிட்டு அதனால் நேரும் விபரீத விளைவுகளையும், இன்னும் பல நல்ல கருத்துக்களையும் உள்ளடக்கிய கதைதான் 'அம்மா.' லேடீஸ் கிளப் விளையாட்டுகள், வாசவதத்தா நாட்டிய நாடகம், டீக்கடைச் சண்டை, சுடுகாட்டுக் காட்சிகள் முதலிய அவசியமற்ற காட்சிகளை நீக்கி விட்டால், படமும் நீளம் குறைந்து, நல்ல 'டெம்போவு'டன் ஓடும் என்பதே நம் கருத்து. ராதை தன் காதலனுடன் வீட்டைவிட்டு வெளியேறும் போது, கழுகு வட்டமிடும் காட்சியும், பின்னணியில் பாடும் பாட்டும் ராதையின் லட்சியத்திற்கே முரணாகவிருக்கின்றன.

அம்மாவாக நடிக்கும் சாந்தகுமாரி தன் பொறுப்புணர்ந்து நடித்திருக்கின்றார். ஒரு தாயின் உள்ளப் பிரதிபலிப்புகளை அவரிடம் நன்கு காணமுடிகிறது. ராதையாக வரும் லலிதாவின் நடிப்பு மொத்தத்தில் நம் பாராட்டுதல்களைப் பெறுகின்றது முந்திய, தமிழ்ப் படங்களை விட, இப்படத்தில் தமிழைத் தெளிவாக, நன்கு உச்சரிக்கின்றார். தன் தந்தையிடம் உண்மைக் காதலைப்பற்றி விவாதிக்குமிடத்திலும், சிறையிலிருக்கும் தன் கணவனை மீட்க அவரிடம் பணம் கேட்கும் கட்டத்திலும், சுடுகாட்டில் மாமியின் சிதைமீது விழுந்து மனம்விட்டு அழும் போதும், லலிதாவின் உயரிய நடிப்பைக் காண்கிறோம். சரோஜா, குறும்புக்காரத் தங்கையாக வந்து அனாயாசமாக நடித்து விட்டுப் போகிறார்.

திக்குரிசி சுகுமாரன் நாயரின் தமிழ் உச்சரிப்பு சரிவரத்

திருந்த இன்னும் இரண்டு மூன்றுபடங்களில் அவர் நடித்தாக வேண்டும். அவர் மலையாளத்தில் புகழ்பெற்ற நடிகராக இருக்கலாம். ஆனால் சினிமாவுக்ேகற்ற நல்ல முகவெட்டு இவருக்கில்லை என்பதை வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கிறது! பாலசுப்ரமணியம் தனக்களித்த பாகத்தை ஏற்றுக் கச்சிதமாக நடித்திருக்கின்றார். டி. எஸ். துரைராஜும், ராமசாமியும் கதையின் நகைச்சுவைப் பகுதியை நிரப்பிவிடுகின்றார்கள்! இவர்கள் தோன்றும் போதெல்லாம் சபையில் ஒரே கலகலப்புத்தான். கதைக்குச் சம்பந்தமுள்ளதாகவே இவர்களின் நகைச்சுவைப் பகுதி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உடை விஷயத்தில் டைரக்டர் கொஞ்சம் கவனஞ் செலுத்தியிருக்கவேண்டும். கதை மலையாளக் கதை என்பதற்காகவும், மலையாள மொழியிலும் படம் தயாரிக்கப்பட்டதாலும், உடைகளும் மலையாள நாட்டிலுள்ளதைப் போலுள்ளன. தமிழில் படத்தைத் தயாரிக்கும்போது உடைகளைத் தமிழ்நாட்டிற்கேற்றவாறு மாற்றியிருக்கலாம். லலிதாவும், சரோஜாவும் சில காட்சிகளில் மேல் துணியில்லாமல் வருவது விரசமாயிருக்கின்றது.

வசனங்களைச் 'சாண்டில்யன்' எழுதியிருக்கின்றார். சில இடங்களில் கொச்சையாவும், சில காட்சிகளில் இலக்கணமாகவும் அமைந்துள்ளது வசனம். பாடல்கள் ஒன்றும் நம் கவனத்தைக் கவருவதாயில்லை. காட்சி அமைப்புக்கள் வாஹினியின் தரத்திலுள்ளன. வெளிப்புறத்துக் காட்சிகளை முயற்சி செய்து படமாக்கியிருக்கிறார்கள். கல்லூரி மாணவ மாணவிகள் உல்லாசப்பிரயாணம் சென்ற இடத்தில், எல்லோரும் சேர்ந்து பாடும் மலைக்காட்சியை, உண்மையிலேயே இயற்கைக் காட்சிகள் நிறைந்ததொரு இடத்தில் படமாக்கியிருக்கலாம்.

படத்தில் காணப்படும் குறைகளையெல்லாம் நீக்கிவிட்டு, படத்தைப் பார்த்தால், 'அம்மா' உணர்ச்சி மிகுந்ததொரு நல்ல படமாகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. பெண்கள் பார்க்கவேண்டிய, ஆபாசமற்றதொரு நல்ல படம் 'அம்மா'.

## படவுலகச் செய்திகள்

பாகவதரின் விசிறிகள் அவர் நடித்த படங்கள் வெளிவரவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள் மூன்றுண்டுகளாக! 'அமரகவி' 'சியாமளா' ஆகிய பாகவதரின் படங்கள் விரைவிலேயே வெளிவர இருக்கின்றன என்ற செய்தி அவர்களுக்குச் சிறிது ஆறுதலளிக்கக் கூடும். அமரகவியில் பாகவதர் பாடியுள்ள பாடல்களெல்லாம்

மிக இனிமையாக அமைந்து விட்டிருக்கின்றனவாம். டி. ஆர். ராஜகுமாரியும், பி. எஸ். சரோஜாவும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கின்றார்களாம் பாகவதருடன்! சியாமளாவில் புதுமாதிரியான மேக்கப்புடன் தோன்றுகிறாராம் பாகவதர்! எஸ். வரலக்ஷ்மி பாகவதருக்கு ஜோடியாக மிகவும் பாடுபட்டு நடித்து வருவதாகத்தெரிகிறது!

★

ராஜகுமாரியின் சொந்தப் படமான "வாழப் பிறந்தவள்" கதையமைப்பில் புதுமையாக இருக்குமாம். பிரபல தமிழ் எழுத்தாளரான 'விந்தன்' வாழப்பிறந்தவளின் வசனப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றார் என்ற செய்தி பெருமகிழ்ச்சிக்குரியதாகும். ராஜகுமாரியின் சகோதரர் டி. ஆர். ராமச்சந்திரன்தான் படத்தின் டைரக்டர். தன் சொந்தப் படமாதலால் மிக்க சிரத்தையுடன் நடித்து வருகிறார் டி. ஆர். ஆர்.

★

பரணி பிக்சர்ஸாரின் "காதல்" ரசிகர்களின் உள்ளங்களைப் பித்து பிடிக்கச் செய்துவிடுமாம். பானுமதி ஒரு நாட்டுப்புறப் பெண்ணாகவும், நாகேஸ்வரராவ் ஒரு நகரத்து வாலிபனாகவும் நடித்து வருகின்றார்களாம்! பானுமதி என்றதும், அவர் டைரக்டர் ஆகியுள்ள செய்தியை உங்களுக்குக் கூறிவிடுகின்றேன். 'சண்டிராணி' 'சுபலேகா' ஆகிய இரு



தமிழ்நாட்டுக்கு வந்துள்ள ஹாலிவுட் நட்சத்திரம் மேரி விண்ட்ஸர்.

படங்களை டைரக்ட் செய்யப் போகிறாராம் பானுமதி! கதை வசனங்களின் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டிருக்கின்றாராம். அவை தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளில் தயாராகுமாம், பானுமதிக்குச் சொந்தமான பரணி ஸ்டுடியோவில்! தென்னாட்டில் டி. பி. ராஜலக்ஷ்மிக்குப் பிறகு, பெண் நடிகர்களில் பானுமதிதான் இப்போது டைரக்டராக மாறியுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள்.

★

புத்தாண்டிலே சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் புதியதொரு படத்திற்கு ஆரம்பவிழா நடத்தியிருக்கின்றார்கள், சந்தடி செய்யாமல்! தமிழ்ப் பெருங் காவியங்களுள் ஒன்றான

'வளையாபதி'யைத்தான் திரைப் படமாக்க முனைந்திருக்கின்றார்கள்! கதை, வசனம், பாடல்களின் பொறுப்பைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 'அண்ணி' புகழ் சேதுதான் வளையாபதியாக நடிக்கவிருக்கின்றான்.

★

என். எஸ். கே. பிலிம்ஸார் தற்போது "தோட்டக்காரனை"ப் படமாக்கி வருகின்றார்கள்! அவர்களின் அடுத்த தயாரிப்பின் ரகசியத்தையும் இப்போது வெளியிட்டிருக்கிறார்கள்! ஆமாம்! 'ரகசியம்' என்பது தான் படத்தின் பெயரும்! மேற்கண்ட இருபடங்களில் என். எஸ். கே. யின் பகுத்தறிவுப் பிரசாரம் பரிமளிப்பதோடு மட்டுமின்றி, அவரின் ரஷ்ய விஜயத்தைப் பற்றிய செய்திகளையும் நகைச்சுவையோடு நமக்கு எடுத்துரைப்பார் என்று நம்பலாமல்லவா?

★

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் டைரக்டர் காசிலிங்கம், வசன கர்த்தா கருணாநிதி ஆகிய மூவரும் சேர்ந்து ஆரம்பித்துள்ள மேகலா பிக்ஸர்ஸும் ஜுபிடர் படக்கம்பெனியாரும் சேர்ந்து 'நாம்' என்னும் படத்தைத் தயாரிக்கின்றார்கள். கருணாநிதியின் புதுமைமிக்க வசனங்களும், காசிலிங்கத்தின் திறமைமிக்க டைரக்ஷனும், எம். ஜி- ராமச்சந்திரனின் அற்புதமான நடிப்பும் சேர்ந்து, "நாம்" முழுவெற்றிப் படமாக அமையுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

★

நாராயணன் கம்பெனியாரின் முதல் தயாரிப்பான "தாயுள்ளம்" பிப்ரவரி வெளியீடாகப் பவனி வந்திருக்கிறது. டைரக்டர் ராம்நாத், 'தாயுள்ளத்தை' மிகவும் சிரத்தையுடன் டைரக்ட் செய்திருக்கின்றாராம். எம். வி. ராஜம்மா, மாதுரி தேவி, மனோஹர் முதலியவர்கள் படத்தின் முக்கிய நடிகர்கள்! இவ்வருடத்திய முதல்தரமான படமாக இருக்குமாம் "தாயுள்ளம்."

★

மாடர்ன் தியேட்டர்ஸார் "காடு" என்றொரு படத்தை பிரபல ஹாலிவுட் டைரக்டரான வில்லியம் பெர்ச் என்பவரின் உதவியுடன் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்! மைசூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள இயற்கைக் காட்சிகள் படமாக்கப்படும். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, சிங்களம் ஆகிய நான்கு மொழிகளில் படம் தயாராகுமாம். ராட் காமிரான், சீசர் ரொமேரோ, அழகி மேரி விண்ட்ஸர் ஆகியவர்கள் நடிக்கிறார்கள். வெகுநாட்களாகத் தமிழில் வனப்படங்கள் வெளிவராத குறையை, இந்தக் "காடு" தீர்த்து வைக்குமென்று நம்புகின்றோம்.

# வேடிக்கை என்னே!



காமிரா

இரண்டாவது உலகமகாயுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் ரேடியோ வைத்திருக்கும் ஹோட்டல் என்றால் அதற்குத் தனி மதிப்புத்தான். தினந்தோறும் காலை மாலை நேரங்களில் சரியாக 7-15 மணிக்கு ஹோட்டலைச் சூழ்ந்து ஜனங்கள் நின்று கொண்டு போர்ச் செய்திகளை மிக உற்சாகத்தோடு கேட்பார்கள். அந்த நேரங்களில் பொதுவாக ஹோட்டலுக்கு உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர் தொகையைவிட வெளியே நிற்பவர்கள் தொகைதான் அதிகமாக இருக்கும். அப்பொழுது ரேடியோக்கள் செய்த இந்த வேலையை முதல் மகாயுத்தத்தின் போது தபால்காரர்கள் செய்து வந்திருக்கிறார்கள்.

கிராமாந்திரங்களுக்கு வாரத்திற்கு ஒருமுறை வருகின்ற கடிதக் கத்தைகளோடு செய்தித் தாள்களையும் விநியோகித்து விட்டுத் தபால்காரர்கள் செய்திகளைப் படித்தும் காண்பிக்க வேண்டியிருந்தது. தபால்காரர் வழக்கமாக வரும் கிழமையில் ஜனங்கள் ஊர்ச் சாவடி, திண்ணை, மடம் ஆகிய இடங்களிலெல்லாம் காத்துக் கிடப்பார்களாம். இவ்வாறு செய்திகளைப் படித்துத் தெரிந்து கொள்ளாவிட்டாலும் பிறர் படிக்கக் கேட்டாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எக்காலத்திற்கும் பொதுவாக இருந்து வந்திருக்கிறது. இன்று எலக்ஷன் சமயத்திலும் இதே நிலைமை இருந்து வருவதைப் பார்க்கிறோம் அல்லவா?

பொதுநலப் பிரியர்களைப் போலவே விளையாட்டு ரசிகர்களிடமும் இந்தக் குணம் இருக்கிறது. கல்கத்தாவில் நடக்கும் கிரிக்கட் டெஸ்ட் மேட்சைப் பற்றிய முடிவுகளை இங்கிருக்கும் கிரிக்கட் ரசிகர்கள் பரபரப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் நமக்குப் பரிதாபமாகக்கூட இருக்கும். கொதிக்கும் கொடிய வெய்யிலில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கிறோமே என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் கிரிக்கட் முடிவுகளைப் பார்த்துக் கொண்டு

**நட்சத்திரங்களின்**
**கிரிக்கட் விழா**

நடுரோட்டில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அருகிலே போலீஸ் இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தாலும் அவர்கள் பயப்படுவதாகக் காணோம். ஒரு வேளை அவரே முடிவுபார்ப்பதற்காக நின்று கொண்டிருக்கிறாரோ என்னவோ?

இம்மாதிரி, கிரிக்கட் முடிவுகளைத் தெரிந்து கொள்வதற்கே இவ்வளவு பரபரப்பும் ஆர்வமும் கொண்டுள்ள ஜனங்கள் கிரிக்கட் மேட்சுக்கு எவ்வாறு அலை மோதிச் செல்வார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. சமீபத்தில் சென்னை ஸ்டேடியம் மைதானத்தில் கிரிக்கட் மேட்ச் ஒன்று நடந்தது. அதுவும் எல்லோருடைய மனதையும் கவரக் கூடிய விளையாட்டுப் போட்டி. அங்கே தென்னிந்தியாவின் தலை சிறந்த நட்சத்திரங்கள் கூடினார்கள். இதைவிட முக்கியமான செய்தி என்னவென்றால் இந்த விழாவில் வசூலான தொகை பூராவையும் க்ஷயரோக நிதிக்காகப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதுதான். மறைந்த இசைக்குயில் வசந்தகோகிலத்தை மனதிற் கொண்டால் நம் நாட்டு நட்சத்திரங்கள் இந்த நிதியின் மேன்மையை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். அவ்வாறு உணர்ந்து இந்த விழாவிலே கலந்து கொள்ள இசைந்தார்களோ என்னவோ, கிரிக்கட் விழா சென்ற மாதம் 27ந் தேதி சிறப்பாக நடந்தது.

நாட்டியம், நடனம், டான்ஸ் என்று பார்த்தவைகளையே திரும்பத் திரும்பப் பலவகைப் பெயர் விளம்பரங்களோடு பார்த்துச் சலித்த சென்னை ரசிக குழாத்தினர் உண்மையிலேயே இவ்விழாவினால் பரவசமடைந்தார்கள். கிரிக்கட் ஆட்டம் ஆரம்பித்தது முதல் முடியும் வரை கரகோஷம், 'கன்டினுவஸாக' இருந்ததை இங்கே கட்டாயம் குறிப்பிடத்தான் வேண்டும். என்ன குஷி! என்ன கும்மாளம்! கிழவிகளும் குமரர்களும் சேர்ந்து சேர்ந்து விழுந்து விழுந்து சிரித்தனர். இந்த விழாவைச் சேர்ந்த செய்தித் துண்டுப் படத்தைக் காயமடைந்த போர்வீரர்களுக்கு உற்சாக மூட்டுவதற்காகப் பயன்படுத்தலாம்.

ஆட்டத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு, முறை என்ற 'ஒழுங்கீனங்கள்' எதுவும் பின்பற்றப் படவில்லை. நடுநிலையாளர்கள்கூடத் தாங்கள் சிரித்து மகிழுவதற்குத் 'தயார்' செய்து கொண்டிருந்தார்களே தவிர, ஆட்டம் அலங்கோலமாக நடந்து கொண்டிருந்ததைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. ஆட்டம் எப்படியிருந்தாலும் ஜனங்கள் லட்சக்கணக்கில் கூடினார்கள். பணமும் நிறைய வசூலாயிற்று. வேறு எந்த நிதிக்கும் பொதுமக்கள் இவ்வளவு உற்சாகத்தோடு நிதியளித்திருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம்.

பொதுமக்களுக்கும் எத்தனையோ ஆதாயங்கள். சினிமா நட்சத்திரங்களில் பெரும்பான்மையினரை நேரில் கண்டுகளித்ததோடு நல்ல வேடிக்கையையும் அனு

பவித்தார்கள். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் விளையாட்டோடு விளையாட்டாக நடந்த காமிக்குகள்தாம். இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. சாதாரணமாகச் சர்க்கஸ் கம்பெனிகளில் சிங்கம், புலி, காடி இருந்தாலும் இல்லாவிட்டாலும் 'கிளவுன்'கள் கட்டாயமிருப்பார்கள். இடைவேளைகளில் அவர்கள் அடிக்கும் கூத்துக்கள் ரொம்பவும் உற்சாகத்தைக் கொடுக்கும். அதுபோல, நட்சத்திரங்கள் கூடிய இந்தக் கிரிக்கட் சர்க்கஸுக்குக் கிளவுன்கள் என்று தனியாகத் தேவையில்லை. அவர்களே கிளவுன்களாக இருப்பார்கள் என்று இந்த விழாக் கமிட்டியினருக்கு எப்படித்தான் முன்கூட்டியே தெரிந்ததோ தெரியவில்லை. அதிலும் நடிகர் சாரங்கபாணி, புளிமூட்டை ராமசாமி களத்தில் நிகழ்த்திய கலாட்டாக்கள்....., எண்ணி முடியாது போங்கள்.

இந்த விழாவில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கூடப் பங்கெடுத்துக் கொண்டார். இந்தக் கிரிக்கட் நாடகத்தில் அவரும் ஒரு நடிகர். ஆகவே டிக்கெட் எடுத்து நாமும், இந்த விழாவைப் பார்க்காமல் போனோமே என்று யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் கலைவாணர் சாதாரணமாக எங்கு போய் வந்தாலும் அங்கே தாம்கண்ட, கேட்ட, உணர்ந்த செய்திகளை உள்ளத்தில் மறைத்துவைக்க மாட்டார். அவரது கதா காலட்சேபத்தில் கதைபோலக் கூறிவிடுவார். அம்முறையிலே கிரிக்கட் ஆட்டத்தையும் அவர் இனி நாடெங்கும் 'நான் விளையாடிய கிரிக்கெட் மேட்ச்' என்று வில்லுப்பாட்டு சகிதம் கூறிவருவாரென்று எதிர்பார்க்கலாம்.

இந்தக் கிரிக்கட் விழாவைப் பார்த்துவந்த பிறகு பொது மக்கள் இதைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். இம்மாதிரி விழாக்களில் பங்கெடுத்துக் கொள்வதால் தங்களுக்குள் சாதாரணமாக நிலவும் அவநம்பிக்கை, திருப்தியின்மை, வெறுப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது என்று சினிமா நட்சத்திரங்களும் கூறுகிறார்கள். இதை பின்பற்றி அரசியல் தலைவர்களும் ஏதாவது ஒரு 'டெஸ்ட் மேட்ச்' ஏற்பாடுசெய்தார்களென்றால் அவர்களுக்குள்ளே நிலவும் போட்டி, பொறாமை, பூசல் எல்லாம் ஒழிந்து போவதுடன் நாட்டை விட்டே ஓடிவிடும் என்று நம்பலாம். விரைவில் பாகிஸ்தான் இந்தியா 'காபினெட்டு'களைச் சேர்ந்த பெரிய பெரிய அரசியல் தலைகளின் 'விளையாட்டுப் போட்டி'யை எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர்கள் "வெளிப்படையாக 'விளையாட்டு' என்று சொல்லாவிட்டாலும், இப்போது நாங்கள் ஐ. நா. வில் செய்து கொண்டிருப்பது அது தானே" என்று கூறலாம்.

ஆகவே ஐ. நா. சபையாவது ஊரூராக விஜயம் செய்து ஜனங்களுக்கு உற்சாகத்தை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சர்வம் விளையாட்டு மயம் ஜகத்!
வாழ்க ஐ. நா. விளையாட்டு வீரர்கள்!

புறநானூறு

# தமிழர் நாகரிக விளக்கம்

ஆ. வ. இராமநாதன் எம், ஏ.

புறநானூறு இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடைச் சங்க காலத்தில் திரட்டப்பெற்ற ஒரு தொகை நூல். ஆசிரியர் பெயரில்லாத பதினாறு பாடல்கள் நீங்கலாக மற்றவை முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்க்கிழார் இறுதியாகவுள்ள நூற்றிஐம்பத்தேழு புலவர் பெருமக்களால் இயற்றப்பெற்றுள்ளன. இப்புலவர் பெருமக்களில் பதினன்கு பேர் அரசர்களாயும் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாயும் காணப்படுகின்றனர். பதினைந்து பேர் பெண் புலவர்கள். இது புறம்பு நானூறு எனவும், புறப்பாட்டெனவும், புறமெனவும் வழங்கும். அகம், புறம் என்னும் பொருள்களுள் புறப்பொருள்பற்றித் தொகுக்கப்பெற்றது இந்நூல். புறமாவது: ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியுமேயன்றி எல்லோராலும் அநுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள். இதில் அறனும் பொருளும் அடங்கும்.

இந்நூலில் பாடப்பட்டோரின் தொகை நூற்றிநாற்பது. முற்காலத்தே இத்தமிழ்நாட்டிலிருந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலிய பலருடைய வரலாறுகளும், கடையெழுவள்ளல்களின் சரித்திரங்களும், கடைச் சங்கப்புலவர் பலருடைய வரலாறுகளும், அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் இந்நூலால் நன்கு புலப்படும். இந்த நூலால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர், ஒரு குலத்தாரல்லர், ஓரிடத்தாருமல்லர். பாடினோரின் வரலாறும் இத்தகையதே. பழந்தமிழ் நாட்டின் கலை, நாகரிகம், வீரம், அரசியல் முதலிய புறஅறிவுத் திறங்களை எடுத்துக் காட்டும் தொகை நூல்களில் தலைசிறந்தது புறநானூறு என்று சொல்லலாம். சுருக்கமாகக் கூறின் பழந்தமிழ் நாட்டை இந்நூலிலே நாம் தெற்றெனக் காணலாம். தற்கால முறைக்கொப்பப் புறநானூற்றை விஞ்ஞானம், சமயம், இலக்கியம், நாகரிகம், போர்முறை, மொழி, வரலாறு ஆகிய துறைகளில் ஆய்ந்தாலும் ஆய்வதற்கு வற்றாத ஊற்றுப்

போன்று பொருள்தரும் நூல் புறநானூறு ஆகும்.

கடைச்சங்க காலத்துத் தமிழ் மன்னர் பலர் புவிச் செல்வத்தோடு கவிச்செல்வமும் உடையவராய் விளங்கினார்கள். அன்னார் பாடல்களின் கருத்தாழமும், சொன்னயமும் படித்து இன்புறற்பாலன. முத்தமிழ் நாட்டை ஆண்ட முடியுடை மன்னர் மூவரும் பாடிய பாடல்களைப் புறநானூற்றிலே காணலாம். மக்களுக்குக் கல்வியறிவு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாம். இது கருதியே உயர் புலமைத் திருவள்ளுவனார், 'கல்வி' என்னும் அதிகாரத்தாற் கல்விச் சிறப்புக் கூறத்தொடங்கி அவ்வுடன்பாட்டு வகையால் அக் கல்விச் சிறப்பு முற்றுப் பெறாமை நோக்கி எதிர் மறைமுகத்தானும் 'கல்லாமை' என்ற அதிகாரத்தாற் கூறுகின்றார். மக்களாய்ப் பிறந்தோர் எல்லோரும் கல்வி கற்று மேம்படவேண்டும் என்ற ஆசையைக் கற்பின் செல்வியாகிய கண்ணகியின் சீற்றத்தால் ஆவி துறந்து அழியாப் புகழ்பெற்ற பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின்பாலால் தாயு மனந்திரியும்
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

என்ற புறப்பாட்டால் நன்கு விளக்குவதை அறியலாம்.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்ற குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் மேற்கண்ட பாண்டியன் பாடிய புறப்பாட்டில் கூறப்பட்டிருக்கிற பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே என்பதை எடுத்தாண்டு, 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றாதலான் செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று நின்றுங் கற்றார் தலையாயினார்' என்று உரையெழுதியிருப்பதால் இப்புறப்பாட்டின் பொருள்நயம் நன்கு புலப்படும்.

பெற்றோரின் அறிவைக் குழந்தைகள் தத்தம் குழந்தைப் பருவச் செயல்களால் மயக்குவர். அங்ஙனம் மயக்குதற்குரிய மக்களை இல்லோர்க்குப் படைக்கப்



"அட நீங்க ஒண்ணு, நடனமில்லை சார். குளிர் பொறுக்க முடியாமெக் கையைக் காலெ ஆட்டிக்கிட்டிருக்கேன். அவ்வளவுதான்"

படும் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடனே கூட வுண்ணும் உடைமை மிக்க செல்வத்தையுடையோராயினும் அவர் உயிர்வாழும் நாளின்கண் பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லை என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடலால் அறியலாம். குழந்தைப் பருவச் செயல்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போன்று அப்பாடல் அமைந்துள்ளது. அதை ஒரு கவியோவியம் என்று கூறுவதே சாலப் பொருந்தும். அப்பாடல் வருமாறு:

"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறையில்லை தாம் வாழுநாளே"

இப்புறப்பாட்டில் கூறப்பட்டிருக்கிற இட்டுந்தொட்டுங்கவ்வியுந் துழந்து நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தல் என்பவைகளைப் பொய்யாமொழிக்குப் பொருள் எழுதிய பரிமேலழகர் 'அமிழ்தினும்ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகையளாவிய கூழ்' என்ற குறளில் சிறுகையால் அளாவுதலுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இவ்வுலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, ஆனால் மன்னன்தான் உயிர் என்ற விழுமிய கொள்கையைப் புலவர் மோசிகீரனார்,

"நெல்லும் உயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால் யானுயிர் என்பதறிகை
வேன் மிகுதானை வேந்தற்குக் கடனே"

என்ற பாடலால் கூறுகின்றார். மேலும் உயிரின் இயக்கத்திற்கு உடல் துணையாக இருப்பது போன்று குடிமக்களின் வாழ்க்கைக்கு அரசன் துணை, மக்களுக்காகவே மன்னன் என்ற சீரிய கொள்கைகள் பண்டைக் காலத்தில் நிலவினவென்பதைப் புறப்பாக்களால் நன்கு அறியலாம். மன்னன் மக்களின் நலத்தை முதலில் கவனித்துப் பிறகுதான் தன்னலம் பார்ப்பான். இவ்வாறு பண்டைத் தமிழ் மன்னர்கள் ஒழுகிய காரணத்தால் தான் 'உரனுடை நோன் பகட்டன்ன எங்கோன்' என்றும் 'உழுத நோன்பகடு அழிதின்றாங்கு' எனவும் 'உழவொழி பெரும்பகடு அழிதின்றாங்கு' என்றும் தமிழ் மன்னர்கள் உழுத நோன்பகடுடன் உவமிக்கப்பட்டனர். உழுத நோன் பகடு (எருது) அறுவடை முடிந்த பின்னர் மக்களால் வேண்டப்படாது ஒதுக்கப்பட்ட வைக்கோலைத் தின்பது போல, அக்காலத் தமிழ் மன்னர் குடி மக்களின் தேவையை முதலில் நிறைவுசெய்து பிறகு எஞ்சியவைகளைத் தாம் அனுபவித்தனர். இக்கருத்தைக் கொண்டு தான் வள்ளுவனாரும் 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' என்று மன்னனைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

கொடையைப்பற்றிச் சிறந்த முறையில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும், பதிற்றுப் பத்தில் ஐந்தாம்பத்தைப் பாடி அரசன் மகனையே பரிசிலாகப்



"இவன்தான் என் கடைசிப் பையன். மூத்தவங்க ரெண்டு பேரும் இப்போ ஜெயில்லே இருக்காங்க. இவன் என்னமோ ஒழுங்காக் குடியுங் குடித்தனமா வீட்டோடு இருக்கிருன்........."

பெற்றவருமான பரணரும் பாடியிருக்கிருர்கள். வலதுகை கொடுப்பது இடதுகைக்குத் தெரியக்கூடாது என்று கொடையைப்பற்றி இன்றும் கூறப்படுவதை நாம் அறிவோம். தமிழ்மறை வகுத்த வள்ளுவரும், "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்,குறியெதிர்ப்பை நீரது டைத்து" என்று ஈகையைப்பற்றிக் கூறியிருக்கிருர். கடையெழு வள்ளல்கள் கொடையிற் சிறந்தவர்கள். அவர்களின் கொடை பிரதியுபகாரத்தை நோக்கிற்றன்று. ஆனல் அது பிறரது மிடியைக் கருதிற்று. இப்பிறப் பின்கட் செய்வதொன்று மறுபிறப்பிற்கும் உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறங்கொள்ளும் வணிகரல்லர் அவர்கள். இக்கருத்துக்களை

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்ருேர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே"

என்ற பாடலாலும் "பாணன் சூடிய பசும் பொற்ருமரை" என்ற புறப்பாட்டில்,

"............என்றும்
உடாஅ போரா ஆகுதலறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணையாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றே அன்றே
பிறர் வறுமை நோக்கின்று அவன்
கைவண்மையே"

என்ற அடிகளாலும் நன்கறியலாம்.

இவ்வுலகம் நிலைத்திருப்பதற்குரிய காரணத்தைக் கூறுவது போன்று பண்டைத் தமிழரின் உயர்ந்த பண்புகளைத் தொகுத்துக் கூறும், 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறப்பாட்டு, கவியரங்கேறிய கடலுள் மாய்ந்த

இளம்பெருவழுதியின் அறிவுத் திறனை நன்கு புலப்படுத்துவ தொன்றும். அப்பாட்டில் 'முற் காலத் தமிழர், தனக்கென வாழார், இந்திரர்க்குரிய அமிழ் தம் வந்து கூடினும் அதைத் தனித்துண்ணர், யாரோடும் வெறுப்பிலர், பிறர் அஞ்சத் தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தற் பொருட்டு மடிந்திருத்தலுமிலர், புகழுக் காகத் தம் உயிரையும் கொடுப் பர், பழியை வெறுப்பர், மனக் கவர்ச்சியில்லார்' என்று கூறி யிருப்பவைகளைக் கொண்டு சங்க காலத் தமிழரின் நாகரிகம் சிறந்த வாழ்க்கை வரலாற்றை நன்கறியலாம்.

தமிழகத்து முடிவேந்தரும், குறுநில மன்னரும், தமிழ் நாடெங்கும் செய்த போர்களைப் புறநானூற்றில் பரக்கக் காண லாம். ஆண்களைப்போன்று பெண்களும் போர் நிகழ்ச்சி களில் ஆர்வங்கொண்டிருந்தனர். "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்ற பொன்முடியார் பாடலில் பிள்ளையைப் பெற்று வளர்த்தல் தாய் கடனென்றும், அதற்குக் கூர்வேல் கொடுத்தல் கொல்லற்குக் கடனென்றும், போர் முனையில் மதயானைகளை வெட்டி வீழ்த்தி வெற்றியுடன் திரும்புவது மகன் கடனென்றும் கூறி மகிழ்கிருள் ஒரு தமிழ் மகள். "மக்கள் மூப்பும் பிணி யும் கொண்டு மடிகிருர்கள். ஆனல் தன் தலைவன் மடிந்தது போர்க்களத்திலே" என்று பெரு மிதத்தோடு வீரம் பேசுகிருள் ஒரு பெண். அவள் கணவன் தன் மார்பிலே பாய்ந்த மாற்றரசன் வேலைப் பிடுங்கிப் பகைவன் யானைப் படைமேல் எறிய அத னல், "புன்றலை மடப்பிடி நாணக் குஞ்சர மெல்லாம் புறங் கொடுத் தனவே" என்று வீரக் களிப் படைகிருள். எனவே பண் டைக்காலப் பெண்கள் போரென்றல் உள்ளமகிழ்ச்சி யும் புன்முறுவலுங் கொண்டு விளங்கினர்கள் என்று கூறினல் அது மிகையாகாது.

பண்டைக்காலத் தமிழ் மன் னர் கொடைமடம் படுவார்களே யன்றிப் படைமடம் படார். புற நானூற்றுப் பாடல்களை ஒவ் வொன்ருக ஆராய்ந்தாலும் பல நயங்கள் காணலாம். புறநானூறு தமிழ்ச்சுவை ஆராய்வோர்க்கு வற்ருத ஓர் இலக்கியச் சுனை யாகும். தொன்மையில் நாட்ட முடையார்க்குப் பல பொருள் தொகுக்கப்பெற்ற ஒரு பண்டார மாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரான தொண்டர்க் குச் சிறந்த குறிக்கோள் காட் டும் மணிவிளக்காகும். தமிழர் நாகரிக விளக்கமாக விளங்கும் புறநானூறு முதலிய சங்க காலத்து நூல்களைப் போற்றிப் படித்து இன்பமும் பயனும் அடையவேண்டியது தமிழர்கள் கடமையாகும்.

[திருச்சி வானெலியில் 7—12—48-ல் நிகழ்த்தப்பெற்றது.]

# காதல் கும்மாளி

வி. ஆர். எம். செட்டியார்

என்னுடைய இருபத்தைந்தாவது வயதில், இயற்கையின் இன்பங்களைக் கண்டு ஓவியங்கள் தீட்டுவதற்காக, சித்திரக் கருவிகளுடன் நான் எங்கும் அலைந்து, சுற்றித் திரிவேன். சித்திரக் கலைக்கு வேண்டிய சாமான்கள் அடங்கிய ஒரு பையை முதுகில் தொங்கவிட்டுக்கொண்டு, இப்படி அலைவதில் எனக்கு ஓர் ஆனந்தம். இன்றைய இன்பத்தில் மூழ்குவேன்; நாளை என்ன வருமென்று சிந்திக்கவே மாட்டேன். எந்தத் துணையுமின்றிக் கண்டதே காட்சி, கொண்டதே கோலமாய் அலைவேன்—மனம் போனபடியெல்லாம்! கிராமத்தில் உள்ள பெண்கள் இயற்கை எழில் நிறைந்தவர்கள், அவர்களைக் கண்டு நான் மோகிப்பதுண்டு. இது உண்மை. என்னைக் கண்டால் அவர்களுடைய இதயமும் இன்பத்தால் துடிக்கும்; நான் பிரிந்தால், வருத்த மிகுந்து அவர்களுடைய கண் துடித்து நீர் துளிக்கும்.

கிராம வாழ்க்கையில், இயற்கையே என்னுடைய காதலியாக மாறிவிடுகிறாள். சூரியனும் சந்திரனும், காடும் அந்தி மாலையும் என் மனதை மயக்கிவிடுகின்றன. காட்டு மரத்தின் அடியில் ஓர் ஊற்றின் தெள்ளிய நீரைக் குடிக்கும் போது, எவ்வளவு அமைதி! எவ்வளவு இனிமை! ஸ்படிகம்போன்ற ஊற்றில் நமது தாடையும் மூக்கும் நனைந்து வெளிவரும்போது அடடா! என்ன பேரின்பம்! சூரியன் அஸ்தமிக்கும் போது, மேகங்களை ரத்தத்தில் மூழ்கடித்து, ரத்தச் சுடர்களை ஆற்றின் இதயத்தில் வாரிக்கொட்டி, என்ன அற்புதச் சித்திரம் தீட்டித் தருகிறான்; இரவின் அமைதியில் தாவள்யமான நிலவின் கீழ், எவ்வளவு அருமையான சிந்தனைகள் பகலைத்தாண்டி உதயமாகின்றன.

நான் ஒரு தடவை மலை நிறைந்ததொரு கிராமத்துக்குச் சென்றேன். அந்த மலை வெண்ணிறம் கொண்டு நன்குயர்ந்து, செங்குத்தாகக் கடலின் ஆழத்தில் பாதம் பாய்ந்திருந்தது. காலையில் பட்டுப் போன்ற இளம் புல்லின் மேல் நடந்தேன். இன்ப உச்சியில் பாடவும் ஆரம்பித்துவிட்டேன். அரை நாள் சுற்றிவிட்டுக் கிராமத்தில் பிரயாணிகள் தங்குமிடத்துக்குப் போனேன். அங்கே லெகாஷியூர் என்பவளுடைய விடுதியில், ஓர் இடம் வாடகைக்குக் கிடைத்தது. ஆனால், அதில் ஏற்கனவே பல பிரயாணிகள் தங்கியிருந்ததால், மிகுந்த சிரமத்துடன், இருண்டு புகைபடிந்த சமையல் அறைக்குப் பக்கத்தில்தான் எனக்கு இடம் கிடைத்தது.

வீட்டுக்காரியைப் பார்த்து நான் கேட்டேன்: "இங்கே பிரயாணிகள் அதிகமா, என்ன?"

சினந்த முகத்துடன் அவள் சொன்னாள்: "என் அறைக்குப் பக்கத்து அறையில், மலர்ந்த முகமுடைய ஓர் ஆங்கிலப் பெண் இருக்கிறாள்."

கூடக் கொஞ்சம் பணம் கொடுத்து, திறந்த முற்றத்தில் தனிமையில் எனக்கு உணவளிக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டேன். பழைய ரொட்டியும் கோழிக் குஞ்சு சூப்பும் தனியாக அருந்தினேன். அப்போது, மரக் கதவைத் திறந்துகொண்டு ஒரு புதுமைப் பெண் வந்தாள். நல்ல உயரம்; சன்னக் கம்பி போன்ற உடல்; கம்பளிபோர்த்த மேனி; உயரத்தால் கையில்லாமல் நடப்பது போல் தோன்றினாள். ஆனால் அவளுடைய நெடிய கையில், வெள்ளைக்குடையொன்று முதுகுப்பக்கம் தொங்கியது. அவளது வெண்மையான தலைமயிர் முகத்தைச் சுற்றி வெண்கதிர்கள் போல் அலைந்து கொண்டிருந்தது.

நான் முன் ஒரு நாள் இயற்கைப் படம் வரைந்து வர்ணம் இழைத்துக் கொண்டிருக்கும் போது, மலையின் உயரத்தில் ஓர் உருவம் தெரிந்தது; ஒரு நீண்ட கம்பத்தில் பறந்துகொண்டிருந்த கொடிபோல் அது தோன்றிற்று. இந்தப் பெண்ணின் உருவமே அது என்று இப்போது கண்டேன். இவளே அந்த ஆங்கில மாது மிஸ் ஹாயரிட். மறுநாள், விடுதியில், பொது மேஜையில், மற்றவர்களுடன் நான் உண்ண அமர்ந்திருந்த போது, இந்தப் பெண் என் அருகிலிருந்தாள். தண்ணீரும் தட்டும், அடிக்கடி மேஜையின் மேல் அவளுக்கு உதவியாக நான் அளித்தேன். அவள் எனக்கு நன்றியளிப்பதாக ஏதோ முணுமுணுத்தாள். ஆனால், எனக்கு அவள் சொன்னது ஒன்றும் புரியவில்லை.

அடுத்த மூன்று தினங்களில் நான் அந்தப் பெண்ணைப் பற்றி நிறைய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். ஆறு மாதங்களாக இந்தக் கிராமத்தில் அவள் தங்கியிருக்கிறாளாம். மேஜையில் யாருடனும் பேசுவதில்லை; வேகமாக உண்பாள்; புராட்டாஸ்டன்ட் மதப்பிரசார நூல் ஒன்றைச் சதா படித்துக்கொண்டிருப்பாள்; அந்தச் சிறு நூலின் பிரதிகளைப் பலருக்கும் தானம் கொடுப்பாள்; தான் ஏசுநாதரை நம்புவதாகவும் நேசிப்பதாகவும் இயற்கையின் விளக்கத்தில் அவரையே காண்பதாகவும் தன் இதயத்தில் ஏசுநாதரையே வைத்திருப்பதாகவும், வீட்டுக்காரி லெகாஷியூரிடம் இவள் சொல்லிக்கொண்டிருப்பாள். ஹாரியட் தன் கிராமத்தைவிட்டுத் துரத்தப்பட்டவள். அவள் கடவுளை நம்பாதவள் என்று பள்ளிக்கூட உபாத்தியாயினி ஒருத்தி சொன்னதை நம்பி, கிராமத்தில் எல்லாரும் சந்தேகப்பட்டு, அவளைச் சமூகத்தைவிட்டே வெளியேற்றி விட்டார்களாம். அவள் அன்று முதல் உலக முழுதும் சுற்றிப்

பார்க்கப் புறப்பட்டுவிட்டாள். இப்படிப்பட்ட ஆங்கிலப் பெண்கள் தங்களுடைய அலங்காரங்களுடன் உலகத்திலுள்ள பல ஹோட்டல்களிலும் தங்கி, ஒய்யாரமாய்ப்பிறர் மனதைக் கலங்க வைக்கும் வண்ணம் அழகுபடுத்திக் கொண்டு மினுக்குவதை யாரும் கண்டிருக்கலாம். இந்தப் பெண்களைக் கண்டால், இவர்களது வலையில் சிக்காமல் நான் ஓடி ஒளிந்து விடுவது வழக்கம்.

ஆனால், இந்த ஹாரியட் என மனதைக் கவர்ந்து விட்டாள். நான் இவளுடைய அழகைக் கண்டேன்; வீட்டுக்காரி லெகாஷியூரோ, இவளைப் பிசாசு என்று கருதினாள். ஹாரியட் ஒரு நாள் கால் ஒடிந்த தவளையொன்றை எடுத்துவந்து தொட்டியில் நனைத்துக் கழுவி அதனுடைய ரணத்துக்கு மருந்திட்டுக் கட்டியது, லெகாஷியூருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதோ மனிதனுக்கு வைத்தியம்செய்வதுபோல், ஒரு சிறு ஜந்துவுக்கு இவ்வளவு கவனித்து இவள் சிகிச்சை செய்தது எல்லாருக்குமேதான் அதிசயமாயிருந்தது. மறுபடி ஒரு சந்தர்ப்பத்தில் கடற்கரையில், ஒரு மீனை விலைக்கு வாங்கிய ஹாரியட், வெகு சிரத்தையோடு அதைத் தண்ணீரில் கொண்டுபோய் எறிந்து விட்டாள்! விநோத குணமுள்ள ஹாரியட்டைக் கண்டு, குதிரைக்காரப் பையன் சொன்னான்: "இவள் வாழ்க்கையை நன்றாய்



அனுபவித்துவிட்டு வந்த கிழவி யாக்கும்."

ஒரு நாள் நான் புதரடியில் அமர்ந்து, செடியின் இலைகளை விலக்கிப் பார்த்துக்கொண்டிருந்த போது, ஹாரியட் அங்கே முழங்காலிட்டுப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்ததைக் கண்டேன். என்னைப் பார்த்ததும், அவள் எழுந்தாள். பகலில் சுழலும் ஆந்தைக்கண்கள் போல தன்னுடைய பயந்த கண்களை என் மேல் வீசினாள்.

சில சமயங்களில், மலையின் சிகரத்திலும் சமவெளிப் பசுமையிலும், வயலிலும் வரப்பிலும் இயற்கையின் சௌந்தரியத்தை அவள் பருகிக் கொண்டிருப்பாள். திரும்பிப் பார்த்தால், தீபஸ்தம்பம் போல மின்னிக் கொண்டு நிற்பாள். சூரிய ஜோதியின் விந்தையும் தங்க வர்ணத்தில் தோய்ந்து கிடக்கும் எல்லையற்ற வானத்தின் வனப்பும், அவளுடைய இதயத்தைக் கொள்ளை கொண்டன. சில சமயங்களில் இலந்தைமரத்தின் நிழலில் சமயநூல் ஒன்றை இன்பமாய், அழகாய்ப் படித்துக் கொண்டிருப்பாள். மண்ணில் மலர்ந்து மணக்கும் கவிதையில் நானும் ஈடுபட்டவன்தான். ஆதலால், இப்படி அலையும் இந்த ஆங்கில நங்கையின் இதய அரங்கத்தில் இசைத்துக்கொண்டிருக்கும் ரகசியங்களை அறிய ஆர்வங் கொண்டேன்.

நான் ஓர் இயற்கைப் படம் எழுதினேன். எனது சித்திரத் திரையில் வலது பக்க முழுதும் ஒரு பாறை நிமிர்ந்து நின்றது. கடலின் அலைகள் பல வர்ணங்களுடன் அதை மின்னிமோதின. சிவப்பும் மஞ்சளும் பழுப்புமாய்ப் பலவித வர்ணங்கள் அதிலே பரவிக் கிடந்தன. சூரியன் தனது ஒளித்திரளை எண்ணெய் ஆறுக அதன் மீது பொழிந்துகொண்டிருந்தான். இதுதான் எனது திரைச் சித்திரம். இதிலே இயற்கை மண்டிக் கிடந்தது. பதினைந்து வருஷங்கள் கழித்து எனது இந்த வர்ணப்படத்துக்குப் பதினாயிரம் பிரான்கள் பரிசு கிடைத்தது. தங்கியிருந்த விடுதிக்கு இந்தப் படத்தைக்கொண்டுபோய் வீட்டுக்காரி லெகாஷியூரிடம் காட்டினேன். அவளுடைய மண்டுக் கண்களுக்கு ஒன்றும் புலனாகவில்லை. அதே சமயம் ஹாரியட் கவனித்து, படத்தைப் பார்த்து ஆனந்தமடைந்து தன் இதயத்தையே அதன் இயற்கை எழிலில் பறிகொடுத்துச் சொக்கி நின்றாள். என் படத்தில் உள்ள பாறை தினமும் ஹாரியட் போய்க் கனவு காணும் அருமையான அதே பாறையல்லவா! உடனே, மிக அன்போடு ஹாரியட் "ஆஹா இயற்கையை உயிர்நிறைந்த தொரு பொருளாக நீ உணர்ந்திருக்கிறாய்!" என்று என்னிடம் சொன்னாள். எனக்கு உடனே உச்சி குளிர்ந்தது. அவளுடைய இன்பப் பேச்சில், எனது இதயத்தைப் பறிகொடுத்தேன். பெண்ணின் புகழ்ச்சியில், என் திறமையெல்லாம் தோற்றது

போலத் தோன்றியது. எனது இன்ப முதிர்ச்சியில் அவளைத் தழுவிக் கொள்ள எண்ணங் கொண்டேன். என் இதயத்தில் காதல் புயலும் அடிக்கத் தொடங்கி விட்டது.

அவள் வழக்கமாய்ப் போகும் மலைக்கு மறுநாள் நான் போன போது அவளும் என்னுடன் கூட வந்தாள். அந்தி நேரம். சூரியன் மறையும் தருணம். கப்பல் ஒன்று சமீபத்தில் தன் குழாயின் வழியாய்ப் புகை கக்கியது. அந்தப் புகை மேகமண்டலத்தை மண்டியது. சூரியன் தன் பல வர்ண ஒளிக் கதிர்களை மேகத்தின் மேல் விந்தையாக வீசிக்கொண்டு மறையும்போது இயற்கை உலக எழிலையெல்லாம் பருகுபவள்போல், அசைவற்று ஆழ்ந்த சிந்தனையுடன் ஹாரியட் நின்றாள். கற்சிலையைப் போல இயற்கையின் இதயத்தில் ஒன்றி உள்ளம் பூரித்தாள். வானையும் கடலையும் அணைய, அவள் ஆவல் கொண்டாள். "நான் காதலிக்கிறேன், காதலிக்கிறேன்" என்று இயற்கையின் மனமோகன வனப்பில் பதுங்கிக் கதறினாள். நான் எப்படித் திரையில் படம் எழுதுகிறேன் என்று பார்க்க ஆவல் கொண்டாள். அப்போது ஒரு கணம் என் பின் நின்று, எனது சித்திரக் கோலால் ஓவிய விந்தைகளை நான் எப்படி எழுப்புகிறேன் என்று கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருப்பாள்; மறுகணம் திடீர் என்று மறைந்துவிடுவாள். சித்திரக் கலையைப்பற்றி நான் அவளுடன் பேசும்போது, அதை அறிந்தவள் போல், ஓர் இன்ப சுரத்துடன் அவள் கூச்சலிடுவாள்.

இன்னொரு நாள், நான் ஒரு காதல் சித்திரம் வரைந்தேன். காதலன் காதலி இருவரும் இதயங்கலந்த நிலையில் கை கோத்த இணைப்பில் மலர்ந்த முகங்களுடன் நிற்கும் காட்சியைச் சித்தரித்தேன். இந்தப் படத்தைக் கண்டதும், ஹாரியட்டின் இதயம் மலர்ந்தது. அவளுடைய கண்கள் மலர்ந்தன. சிந்தனைப் புயலில் உள்ளம் இழந்தாள். கொஞ்ச நேரம் சென்றதும் திடீரென்று மறைந்து விட்டாள். என் இதயமும் துடித்துக் குமுறியது.

அன்று இரவு.

நான் தங்கியிருந்த விடுதியில் பதினெட்டு வயது வேலைக்காரி ஒருத்தி இருந்தாள்; செலஸ்டி என்பது அவள் பெயர். வாட்ட சாட்டமாயிருப்பாள். மேனி மினுக்கி; என்னுடன் எப்போதும் சரஸமாய் விளையாடுவாள். அந்த இரவில் கோழிக் குஞ்சுகளைத் திறந்துவிட்டு அவள் வரும்போது, நான் என்னவோ மதிமோசம் போனேன். மோகங்கொண்டேன். அவளை இறுகத் தழுவி அவளது முகத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டேன். என்ன துர்ப்பாக்கியம், தற்செயலாய் அங்கே வந்த ஹாரியட், இதைக் கண்டு விட்டாள். நான் திடுக்கிட்டேன். அவளும் திகைத்து முகங் கறுத்தாள்.

மறுநாள் காலையில் ஹாரியட் சாப்பிட வரவில்லை.

கிணற்றில் தண்ணீர் இறைக்க வாளி கீழே இறங்கும்போது, அதை ஏதோ மோதியது. குதிரையோ என்று சந்தேகித்து, ஓர் ஆள் இறங்கிப் பார்த்தான். அது மிஸ் ஹாரியட்டின் பிரேதம். வெளியே எடுத்துக் கூர்மையாய்க் கவனித்தபோது, முகம் அடிபட்டு ரத்தக்கறை தோய்ந்திருக்கிறது. நானும் இன்னொரு வேலைக்காரனுமாக இந்தப் பிணத்தைக் கழுவி, வேறு உடை உடுத்திப் புதைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, அவள் உடையிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. தன்னை இந்தக் கிராமத்திலேயே புதைக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பு அதிலேஇருந்தது. ஹாரியட்டின் பிரேத உடலைப் பார்த்தபோது, பழைய காதல் சிந்தனைகள் என் உள்ளத்திலே கொந்தளித்துக் குமுறின. அருமையான—எவரும் காதலிக்காத, அந்த இன்ப முகத்தைக் கண்டு நான் பரவசமானேன். வெளுத்த உயிரற்ற அந்த முக மண்டலத்தில் எனது ஆர்வம் நிறைந்த முத்தங்களைப் பொழிந்து, துணையற்ற அந்த ஆத்மாவைச் சாந்தப்படுத்தினேன்.

[மூலம்: மாப்பஸான்


## மாதவிடாய் நின்றுபோனதா?

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

## கர்ப்பதடை

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)**
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (        ) MADRAS-1.
பிராஞ்சு 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# ... மலர் மணம் ...

## அழகான மலர்

பொன்னி பொங்கல் மலர் அழகாக மலர்ந்திருக்கின்றது. மட்டற்ற மகிழ்ச்சி.

இராஜ. அரியரத்தினம்.
ஆசிரியர்: 'ஈழகேசரி'
சுன்னுகம்

★★★

## மலர்ச் சோலையில்...!

பொன்னி பொங்கல் மலர்ச் சோலையில் சித்திரப் பூக்கள் சிரித்துக் குலுங்கின; கவிதைத் தேன் துளிகள் இனித்தன; கட்டுரை, கதைகளாகிய கனிகளை உண்டு மகிழ்ந்தேன்.

அகிலன்.
திருச்சி

★★★

## அருமை!

பொன்னி மலர் பார்த்தேன். அருமையாக இருக்கிறது.

சுகி.
திருச்சி

★★★

## வனப்பு, வளம், உழைப்பு!

எதிர்நோக்கியிருந்த பொன்னி பொங்கல் மலர் என்னைக் கண்டது. காஷ்மீர் பூஞ்சோலையின் வனப்பையும், சோழநாட்டு வயலின் வளத்தையும், லெனின் கிராட் நகரின் உழைப்பையும் மலரில் கண்டு மகிழ்ந்தேன். வாஷிங்டனின் அச்சழகையும் அடுத்தமலர் அடையும் என நம்புகிறேன்.

கோவை—இளஞ்சேரன்.
புதுக்கோட்டை

★★★

## அறிவை வளர்க்கின்றுள்!

பொன்னி மலர் கிடைக்கப் பெற்றேன். பொன்னியாகிய தமிழ்நாட்டின் செல்வியானவள் கண்ணியமாய்த் தமிழர்கட்குக் காட்சிதந்து அறிவை வளர்க்கின்றுள். பொன்னி நீடூழி வாழ்க!

எம். எம். தண்டபாணி தேசிகர்.
தியாகராய நகர்.

★★★

## பன்மடங்கு சிறந்தது

முன்னை மலர்களைக் காட்டிலும் இவ்வாண்டு மலர் பன்மடங்கு சிறப்புடையது. அட்டைப்படம் முதல் தரம்; கவிதைகள் அனைத்தும் தரத்தால் உயர்ந்தன. திரைவிருந்து மிகமிக நன்று.

மு. அண்ணுமலை,
அண்ணுமலை நகர்

★★★

## மயக்க மருந்து

தாங்கள் அனுப்பிய 'மயக்க மருந்து' கிடைத்தது. மலர்வந்து

ஒருவாரம் ஆகிறது. இன்னும் ஒரு ஏடு கூடப் படிக்கவில்லே. காரணம் மலரை எடுக்கிறோம்; பார்க்கிறோம்; பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இப்படி ஒரு 'மயக்க மருந்து' அனுப்பிவிட்டு இதற்குப்பெயர் 'பொன்னி—பொங்கல் மலர்' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் நானும் என் நண்பர்களும் 'மயக்க மருந்து' என்று குறிப்பிடுகிறோம். தவறில்லேயே!

டொ. வைத்தியநாதன்,
ஆமதாபாத்

★★★

## பிரமித்தேன்!

தாங்கள் அன்புடன் அனுப்பி வைத்த பொன்னி பொங்கல் மலர் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியுற்றேன். மலர் பிரமாதமான முறையில் அமைந்துள்ளது கண்டு பிரமிப்பு உண்டாயிற்று.

சி. கே. ராதாகிருஷ்ணன்,
சென்னே.

★★★

## வெற்றியின் விளிம்பு

வழக்கம் போல இந்த ஆண்டு 'மலர்' கிடைக்கப்பெற்றேன். யாழிலிருந்து கிளம்பும் நாதமும், கலகலக்கும் மலேயருவியின் மதுரஒலியும், புது மலரின் நறுமணமும், தேனின் சுவையும் மலரில் உள்ளன. பொன்னி பேசினாள்; புல்லாங்குழல் வாசிப்பதைப் போல இருந்தது. சிரித்தாள்; சிலம்பின் பரல்கள் குலுங்குவதைப் போல இருந்தது. அவள் ஆண்டுதோறும் பருவத் துடிப்புள்ள குமரியாக வருவது கண்டு எனக்கு வேட்கை அதிகரித்து விட்டது. இந்த அரியமுயற்சியில் தாங்கள் வெற்றியின் விளிம்பைத் தொட்டுவிட்டீர்கள்.

இளமைப்பித்தன்,
புதுக்கோட்டை

★★★

## அரிய கருவூலம்

பொங்கல் மலராக வெளிப்போந்த மற்ற பத்திரிகைகளே வென்று நிற்கிறது தங்கள் பொன்னி பொங்கல் மலர். இது நெடுநாள் போற்றிப் பாதுகாக்க வேண்டிய ஓர் அரிய கருவூலம்.

ரத்தினம்
கா. மங்கலம்

★★★

## சிறந்த கலேப்படைப்பு!

பொன்னி மலர் கிடைத்தது. இத்தனே ஆண்டுகளேவிட இவ்வாண்டு பொன்னி புதுநகை புரிகிறாள். முகப்புப்படம் மிக மிகப் பிரமாதம்- கருத்துக் களஞ்சியம்! சிறந்தகலேப் படைப்பு.

வாணிதாசன்,
சேலியமேடு

★★★

## அற்புதம்!

ஆண்டுக்கு ஆண்டு அழகு சேர்க்கும் அற்புதத்தை எங்கு கற்றுக் கொள்கிறாள், இந்தப் 'பொன்னி' என்றுதான்

கேட்கத் தோன்றுகிறது, இந்த ஆண்டு மலரைப் பார்க்கும் பொழுது! தொட்ட இடமெல்லாம் மணக்கும் வித்தையை, இந்த மலர் கற்றுக்கொண்டு விட்டது என்று கூறத் தோன்றுகிறது, முழுவதும் முகர்ந்து முடித்த பிறகு! மலரின் இதழ்களின் வண்ணம் கண்ணைப் பறிக்கிறது. மணமோ உள்ளத்தைக் குளிர்விக்கிறது. 'பொன்னி வாழ்க! வளர்க!' என்று என்னையறியாமல் என் உதடுகள் அசைகின்றன.

தில்லை-வில்லாளன்
காஞ்சிபுரம்

★ ★ ★

## மூசுத்தங்கம்

நம் 'பொன்னி' பொங்கல் மலரைப்பார்த்தேன்-படித்தேன் இல்லை. பதியவைத்தேன். அட்டைப் படத்தில் மயங்கிப்போய், அத்தனை ஏடுகளையும் பார்க்காமல் படிக்காமல் ஒரு முறை திருப்பி முடித்தேன். பிறகு பார்த்தேன், அதன் பின் படித்தேன்.

வண்ணப்படங்கள் கண்ணைக் கவர்ந்தன. ஆனால் என் கண்களோ அத்துடன் அமைதியடையாமல், அப்படங்களைத் தீட்டிய ஓவியர்களையும் ஒரு முறை காணத் துடித்தன. "இயற்கை வென்றது" என்ற ஓவியமும் குறிப்பும், ஒன்றையொன்று வெல்ல, பட்டி மண்டபத்தில் பேசும் பேச்சாளர்களைப் போலப் போட்டியிடுகின்றன.



"பாப்பா . இங்கே பாரு யானை .. இந்தா இங்கே...."

கவிதைகள் கலையின் படைப்பு; கற்பனையின் உச்சி; வாழ்க்கையின் மறுபதிப்பு. கதைகள் உள்ளப் போராட்டத்தின் உணர்ச்சித் துடிப்புக்கள்-ஆனால் உலகில் நடக்கும் உண்மைகள். கட்டுரைகள் காலக்கண்ணாடிகள்.

சுருக்கமாகச் சொன்னால், முருகு தரும் 'பொன்னி' மலர் முலாம் பூசப்பட்ட மினுக்குத் தங்கமல்ல; மெருகு மாறாத மூசுத்தங்கம்.

ஆனால் முடிவாக மலரைப் படித்து முடித்தவுடன் வருத்தம் தான் ஏற்படுகிறது. 'இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்குப் பிறகல்லவா, அடுத்த மலர் வரும். மாதம் ஒரு பொங்கல் வராதா?' என்ற எண்ணமே அவ்வருத்தத்தை உண்டாக்குகிறது. அவ்வருத்தத்தைப் போக்க வாரம் ஒரு 'பொன்னி' யாவது தாருங்கள்.

பெரி. சிவனடியான்
அண்ணாமலைநகர்

# காகிதப்பூ

எஸ். ஆறுமுகம்

## 1. பெண்

ரேணுகாவின் இருதயத் துடிப்பு அதிகரித்தது; அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள்.

திரும்பவும் பலப்பல எண்ணங்கள் அவள் மனதில் தோன்றி மறைந்தன. எண்ணங்கள் மறைந்திருக்கலாம்; ஆனால் அதன் விளைவு சுழலாகச் சுற்றி மாறி விட்டதே!

தூர வீசி எறிந்த நாவல் புத்தகத்தை எடுத்துக் குறிப்பாக அந்தப் பக்கத்தைப் புரட்டினாள்.

"......பெண்களைப் புரிந்து கொள்ளவே முடியாது; புரிந்து கொள்ளவும் அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்..."

வார்த்தைகள் அவளுக்குச் 'சுருக்'கென்று தைத்தன. அவள் புத்தகத்தை விட்டெறிந்தாள். அவள் தடுமாறினாள்; தத்தளித்தாள்.

நடுச்சாமம் நெருங்கிக்கொண்டிருந்தது; நிலவு சிரித்துக் கொண்டிருந்தது.

தலையணையைக் கைப்பிடியாகக் கொண்டு எழும்பி உட்கார்ந்து, தலையைப் பக்கவாட்டில் திருப்பினாள்.

வராந்தாவில் நிலவுப் பின்னணியில் சாய்வு நாற்காலியில் ஏதோ படித்துக்கொண்டிருந்தார் அவள் கணவர். அவர் இன்னும் தூங்கவில்லை. அடுத்த கணம் அவரது இதய அடிவாரத்தை விட்டுப் பிரிந்த ஆழ்ந்த நெட்டுயிர்ப்பை அவள் காது கொடுத்துக் கேட்டிருக்கவேண்டும். ஆனால் அந்தப் பெருமூச்சிலே எப்படிப்பட்ட சுழல் வீசிற்று என்பதை ரேணுகா அறிவாளா, மாட்டாளா?

முகுந்தன் பேரில் அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. இன்பம் சுழித்தோடிச் செல்லவேண்டிய தன் வாழ்க்கையில் குறுக்கிட்டுத் தன்னை அடிபட்ட பட்சியாகச் சோர்ந்திருக்கச் செய்துவிட்டாரே என்று எண்ணி ஏங்கினாள் அவள். பாவம், பேதை! தன்னை உடைமையாக்கிக்கொண்ட பதியைப்பற்றி இப்படிப்பட்ட மனோபக்குவத்தில் அவள் பெண் மனம் உருமாறிவிட்டிருந்தது.

"ரேணுகா, உன் அக்கா கோமதி வருகிற வெள்ளியன்று புறப்படுகிறதாகக் கடிதம் போட்டிருக்கிறாள்."

தன் தந்தை, பெற்ற பாசத்தின் பெருமிதம் பொங்கி வழியக் காலையில் கூறிய செய்தி அவள் நினைவுக்கு வந்தது.

"அக்காளுக்கென்ன? கொடுத்து வைத்தவள்; பாக்கியசாலி. கைநிறைந்த பொன்னை விடக் கண் நிறைந்த கணவனே மேல் என்று தெரியாமலா சொல்லுகிறார்கள். ஆம்; மன்மதனைப் போன்ற கணவனைப் பெற்ற அவள் வாழ்க்கையில் வசந்தம் நிலவக் கேட்கவா

வேண்டும்? ஆசை நாயகனின் இன்பச் சூழ்நிலையில் நாட்கள் ஒவ்வொன்றும் அவளுக்குப் பூலோக சுவர்க்கமாகத் தோன்றக்கேட்கவா வேண்டும்? அவள் அதிர்ஷ்டக்காரி! ஆனல் நான்—? என் கணவர்—? ஐயோ...!"

இதயக் குரல் எங்கும் எதிரொலித்துப் பரவியது. இதயத்தில் பிரளயம்; கண்களில் முத்து முத்தாகச் சரம் தொடுத்து நின்ற வெள்ளம். அவள் விம்மினள்.

## 2. கனவு

"ரேணுகா"

"..............."

"ரேணுகா"

"அம்மா"

தோட்டத்துத் தென்றலில் திளைத்திருந்த அவளுக்கு அன்னையின் அழைப்பு விழிப்பைத் தந்தது.

"ரேணுகா, மாப்பிள்ளை வீட்டார்கள் உன்னைப் பெண் பார்க்க வரும் நாழி நெருங்கிவிட்டது. சீக்கிரம் அலங்காரம் செய்து கொள்."

தாயின் தூண்டுதல் அவளுக்கு நூதனமாகப் பட்டது.

"மாப்பிள்ளை! மாப்பிள்ளைக் கோலத்தில் தோன்றி, மணவாளனுகப்போகிறதற்காக ஒத்திகை பார்க்கவரும் யாரோ ஒரு இளைஞர். அவ்வளவுதான். அந்த இளைஞர் அழகாக இருப்பாரா? நான் எதிர்பார்த்திருக்கும் வண்ணம் வனப்புப் பெற்றவராக வாய்த்துவிட்டால்...ஆகா! ஆம்; இம்முறை வருபவர் என் 'சர்டிபிகேட்' பெறக் கட்டாயம் தகுதிபெற்றவராகத்தான் இருப்பார். எம். ஏ. படிப்பாம். செக்ரடேரியட்டில் வேலையாம். பி. ஏ. படித்த எனக்கு எம். ஏ. மாப்பிள்ளை. நல்ல ஜோடி; அற்புதமான பொருத்தம். அப்படி உலகம்கூறவேண்டும். என்தோழியர் குழாமும் அப்படிச் சொல்லிச் சிரித்து என்னைக் கைகுலுக்க வேண்டும். 'ரேணுகா, உன் அழகிற்கு எங்கிருந்தோ தொப்பென்று குதித்து ஒரு மன்மதன் உன்னைக் கொத்திக்கொண்டு போகப்போகிறார்' என்று என் சிநேகிதி ரஜனி கூறிய வாக்குப் பலித்துவிட்டால் அவள் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்.

நினைவுகள் 'செஸ்' விளையாடின.

"ரேணு..."

"அம்மா"

"ரெடியா"

"ஓ..."

ரேணுகா அப்பொழுதுதான் பி. ஏ. பட்டம் பெற்றாள். அழகு என்றால் அப்படிப்பட்ட அழகு. ரேணுகா என்ற பெயரில் அழகின் ரகசியம் அடங்கியிருப்பதாக அவள் தோழியர் கூட்டத்தில் ஒரு அபிப்பிராயம் என்றுமே உண்டு. அத்துடன் படிப்பும் நிறைந்துவிட்டால் அழகின் எடை, தரம்உயருவது நியாயமே யல்லவா? அழகு, படிப்பு இவற்றுடன் அந்தஸ்தும் இணைந்து விட்டால், பின் கேட்கவும்வேண்டுமா? அவள் ரிடையர்ட் ஜட்ஜ் சரபசிவத்தின் புதல்வி. அவருக்கு இரு கண்கள்



197807

போன்ற இரு புதல்வியர்கள். மூத்தவளைப் பம்பாய் ஆபீஸர் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். இப்போது இளையவள்—ரேணுகாவின் மணமும் முடிந்துவிட்டால் அவர் கவலை விட்டது.

“ரேணுகா”

“அம்மா”

அவள் அடிமேல் அடியெடுத்து வைத்துப் புறப்பட்டாள். மாப்பிள்ளை வீற்றிருக்கும் ஹாலின் நிலைப்படிமுன் அவள் தயங்கி நின்றாள். ஏதோ ஒன்று அவளைப் பிடரியைப் பிடித்துத் தடுத்தது. வெட்கமா? எத்தனையோ கல்லூரிக் கூட்டங்களில் கம்பீரமாகப் பேசினவளாயிற்றே அவள்! பின்...!

எதிரே பிரதிபலித்துக் காட்டிக்கொண்டிருந்த நிலைக்கண்ணாடியில் அவள் தன் அழகைப் பார்த்தாள்; ரசித்தாள். தன் நிலை



அவளை அண்ட அரைக் கணம் பிடிக்கத்தான் பிடித்தது. அழகாக உடுத்தி நிற்கும் வேறு ஒரு பெண்ணை ரசிப்பது போல அவள் ஆராதித்தாள் அழகை. கடைசியில் தான் ரசித்தது தன்னையே என்ற எண்ணம் பரவியபோது அவள் நாணித் தலைகுனிந்தாள். நாணமா?

ஹாலில் மாப்பிள்ளை வீற்றிருந்தார். அவளும் போய் உட்கார்ந்தாள். இருதரப்புப் பெற்றவர்களும் இருந்தார்கள்.

ரேணுகா குனிந்த தலை நிமிரவில்லை. சில நிமிஷங்கள் சன்னக் குரலில் ஏதேதோ பேசிக்கொண்டார்கள்.

முகத்தில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்துவிட்டாள் ரேணுகா. அவளிடமிருந்து பெருமூச்சுப் புறப்பட்டது. எண்ணங்கள் ஊர்வலம் புறப்பட்டன.

"அவர் எப்படி இருப்பார்? என் தீர்ப்பை ஒட்டிய மன்மதனாகவே வாய்த்திருப்பாரா? எவ்வளவு அன்புடன் குழையக் குழைய ஆங்கிலத்தில் பேசினார்? ஆனால் அவரைப் பார்த்துப் பேசத் துடித்த எனக்குக் கடைசி வரை குனிந்த தலையை உயர்த்தக் கூடத் தெம்பு வரமாட்டேன் என்று விட்டதே. பெண் என்றால் இதுவேதான் வரம்பின் விளிம்பு போலும்! எண்ணம் கூட்டுவிக்கும் முடிவுக்குத் துணிவையும் கூட்டுவிப்பதானால்... ஆம்; விசித்திரம்தான்!"



"காசிக்குப் போகலாம்னு நினைக்கிறேன். செலவு என்னவாகும்?"

"நினைக்கிறதுக்கு ஒண்ணும் செலவாகாது சார். போய் வந்தால் தான் செலவு."

---

என்ன தோன்றியதோ, எழுந்து கதவிடுக்கில் தன்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்று ஓடினாள். அதே சமயம் அன்று தன் தமக்கையைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளையை இதே போலத்தானே அவள் கோமதிக்குக் காட்டித் தன் அபிப்பிராயத்தையும் தெரிவித்தாள். அத்தானைப்போல இவரும் அழகானவராக வாய்த்துவிடுவாரல்லவா?

சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள்; கண்களின் ஆழத்தில் ஆயிரம் ஆசைக் கனவுகள். இத்தகைய பாணிப்பில் கதவிடுக்கல் வழியாக 'அவரை'க் கண்ட ரேணுகா கணப்புக் குழியில் கை வைத்தவள் மாதிரி கதிகலங்கிப் போனாள்.



"சும்மா ஏன் தொணதொணன்னு சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்கே."

"நீங்களும் இதையேதான் இந்த ரெண்டு மணி நேரமாச் சொல்லிக்கிட்டிருக்கேங்க."

---

"ரேணுகா, நீ அதிர்ஷ்டக்காரி. உயர்ந்த இடம். மாப்பிள்ளை பூரணமாகச் சம்மதித்துவிட்டார். கல்யாணம் முடிந்துவிடவேண்டியதுதான்" என்று சொன்னாள் அவள் அம்மா.

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. காரணம் 'அவர்' அவள் எதிர்பார்த்தபடி அதிரூப சுந்தரனாக இல்லாமலிருந்தார்—அப்படி அவள் நெஞ்சில் பட்டது. பெற்றவர்கள் வார்த்தைக்கு எதிர்வார்த்தை சொல்ல அவளுக்கு அச்சமயம் திராணியில்லை. விரைவிலேயே ரேணுகாவும் முகுந்தனும் வாழ்க்கையில் பிரவேசித்தனர்.

## 3. பிளவு

காலடி ஓசை கேட்டது. படுக்கையில் புரண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் ரேணுகா. தன்னை யாரோ ஸ்பரிசிப்பதை உணர்ந்ததும் திரும்பினாள். முகுந்தன் எந்தவித உணர்ச்சியுமின்றிப் புன்னகை பூத்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

"ரேணுகா"

............

"ரேணுகா"

............

"ரேணுகா, உன்போக்கு அதிக விசித்திரமாக இருக்கிறது. நானும் அன்றுதொட்டுக் கவனித்துக்கொண்டு வருகிறேன். என்னிடம் ஏன் இந்த உதாசீனம்? என்னிடம் ஏன் இந்தப் பராமுகம்? வாய்திறந்து பேசினால்தானே உன் போக்கை நான் புரிந்துகொள்ளக்கூடும். இப்படி ஒட்டாமலே இருந்துகொண்டு வந்தால், வாழ்க்கைதான் எங்ஙனம் ஒப்பேறும்? மணல்வீடு கட்டி விளையாடும் பிஞ்சுப் பிராயத்திலிருந்தே நாம் ஒருவரை ஒருவர் அறிந்திருக்க வேண்டுமென்ற நியதியில்லையே. ஆனால் நேற்று வந்த நீயே அல்லவா என் கனவுப் பதுமை. சிந்தித்துப்பார். என்னில் ஏதாகிலும் மாறுதல் வேண்டுகிறாயா, சொல். உன் அன்பிற்கு நான் என்றும் மாறுபடேன். நீ படித்தவள்; பட்டம் பெற்றவள். துணைவன்—துணைவியர் இருவரும் மனம் விட்டுப் பழகினால்தானே வாழ்வு வாழ்வாக முடியும்! ரேணுகா......"

தன் கணவன் தான் நினைத்ததுபோல மன்மதனாக—அழகின்

இருப்பிடமாக வாய்க்கவில்லை என்பது ஒன்றே ரேணுகாவின் குறை. அதற்காகவே இந்த மாற்றம்! அவள் தீர்ப்பு அப்படி!

முகுந்தனின் நிறம்மட்டும் கறுப்புத்தான்; ஆனால் அவர் உள்ளம் கறுப்பல்லவே! பூப் போன்ற இதயம் படைத்தவர் அவர். வாழ்க்கையை அறிந்திருந் தார்; தன் மனைவி ரேணுகாவை அறிந்திருந்தார்.

ரேணுகா தன் கணவரை அறிய வில்லை; அறிய முடியவில்லை; அறியப் பாக்கியம் செய்யவில்லை.

உடன்பிறந்த தன் சகோ தரிக்குக் கிட்டிய பாக்கியம் தனக் கில்லையே என்று பொருமினாள் ரேணுகா. தன்னை விட அழகில் மட்டமான தமக்கைக்கு அழ கான கணவர் கிடைத்தது பற்றி அவள் ஆத்திரப்பட்டாள்; மனம் புழுங்கினாள். தன் கண வரையும் அத்தானையும் அவள் மனத் தராசு எடைபோட்டது. ஏமாற்றமும் ஏக்கமும் அவள் முகத்தில் எடை நின்றது.

காலண்டர் தாள்கள் கிழித் தெறியப்பட்டன.

ரேணுகா—முகுந்தன் தாம் பத்யப் பிணைப்பிலே எவ்வித மாற்றமோ, பிணைப்போ, முன் னேற்றமோ நிகழவில்லை. சாப் பாட்டு வேளைகளில் ஒருவர் முகத்தை ஒருவர் ஜாடையாகப் பார்த்துக்கொள்ளுவதுடன் சரி; கேட்ட கேள்விகளுக்குப் பதில்கள் பரிமாறிக்கொள்ளுவ துடன் சரி. அவ்வளவுதான் அவர்கள் வாழ்க்கை; தாம் பத்யம்!



"எத்தனையோ பேர் என்னிடம் வைத்தியம் பார்க்க வந்திருக் காங்க...உம்...என்னமோ, இந்தா மருந்து!"

பத்திரிகைகள், நாவல்கள் அவள் மேஜையில் குவிந்திருந் தன; செஸ், காரம்போர்டுகள் காத்துக்கிடந்தன; ரேடியோ இசை யெழுப்ப நேரம் பார்த் திருந்தது; வண்ணமலர்கள் மணம் வீசத் தவங்கிடந்தன.

ஆனால்......

ஜோடியாக முகுந்தன்—ரேணுகா தம்பதிகள் ஒரு நாளேனும் சினிமா, பீச், எக்சி பிஷன், பிக்னிக் என்று போன தில்லை; போகவில்லை. அவ்வளவு தூரம் தன்னைப் பண்படுத்திக் கொள்ளவில்லைரேணுகா. பங்களா 'போர்டிகோ'வில் காட்சிப் பொருள்போல நின்ற 'வாக் ஸால்', தம்பதிகள் இருவருக்கும் தனித்தனியே சேவை புரிந்தது. ஆக, ஒருமாதிரி அவர்கள் வாழ்க்கை வந்தது; நடந்தது!

ரேணுகாவைச் சில நாளைக்குத் தன்போக்கில் விட்டுத் திருப்பத்

தீர்மானித்தார் முகுந்தன். ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் தன் குற்றமுணர்ந்து அவள் தன்னிடம் அடைக்கலம் புகுவது திண்ணம் என்றவரை அவர் முடிவு கட்டியிருந்தார். ஏனென்றால் அவர் வாழ்க்கையை அறிந்திருந்தார்.

## 4. உணர்வு

கோமதி வருவதாகச் சொல்லியிருந்தது அன்றைக்குத்தான். ரேணுகாவின் இதயம் அதிகமாகச் சலனமடைந்திருந்தது. சகோதரியைப் பார்க்கப்போகும் ஆவல் ஒருபுறமிருப்பினும், அவளைப்போலத் தானும் அதிருஷ்டம் செய்யவில்லையே என்ற குறையும் அவளுக்குத் தோன்றித் துன்பப்படுத்தியது. கல்யாணத்திற்குப் பிறகு இன்று தான் கோமதி வரப்போகிறாள். 'முன்னைவிட அக்காள் எவ்வளவு பெருமிதத்துடனும் பூரிப்புடனும் திகழ்வாள்? இன்ப வாழ்வில்—கண்ணிறைந்த கணவனின் சூழ்நிலையில் அவளுக்கு என்ன குறை?' என்று நினைத்தாள் அவள்.

கோமதிக்காக ஒவ்வொரு வரும் காத்திருந்தனர். அவள் கணவருக்கெனப் பிரத்தியேக விருந்திற்கும் ஏற்பாடு நடந்தது

அப்பொழுது சாம்பசிவத்தின் விலாசத்துக்குத் தபால் ஒன்று வந்தது. கோமதி எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்த அவர் மலைத்துநின்றார். ரேணுகா பதறிப்போய்க் கடிதத்தைப் படிக்கலானாள்.

" அப்பாவுக்கு,

என் வரவை வீட்டில் ஆசையாக எதிர்பார்த்திருப்பீர்கள். ஆனால் என்னால் முடியாது போய்விட்டது. காலம் என்னை அப்படிப்பட்ட அவல நிலைக்கு ஆளாக்கிவிட்டது—அல்ல, கொண்ட கணவர்—என் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளவேண்டிய பதி என்னை ஆக்கி விட்டார். தனக்காக என்னை மாய்ந்து மடிந்துபோகச் செய்துவிட்டார். அன்றே தெரியப்படுத்தினால் என்னுடன் நீங்களும் வீணாகத் துயரப்பட வேணுமே என்று பேசாமலிருந்தேன். செய்தியை மூடுமந்திரமாக்கினேன். கண்ணுக்கு ரம்மியமான துணைவர் கிடைத்ததில் எவ்வளவோ பூரித்திருந்தேன். ஆனால் அவர் இப்படிக் கேவலமாக நடந்து கொள்வாரென்று எதிர்பார்க்கவில்லை. துர்ப்பழக்கங்களுடன் பெண் லோலனாகி விட்டார். காலங்கடந்து இரவுகளில் வரும்போது 'ஏன்' என்று கேட்டால் எரிந்து விழுகிறார். கடைசியில் அவர் 'லீலை'க்குச் சோதனை வந்துவிட்டது. அவர் வேலைபார்க்கும் கம்பெனியில் ரூபாய் இரண்டாயிரம் கையாடிவிட்டாராம். சேட் கேஸ் போடப் போகிறானாம். அவர் ஆளே உருத்தெரியாது போய் விட்டார். சொட்டும் அவர் அழகு எங்கோ ஒளிந்துவிட்டது. நீங்கள் வந்து ஈடுசெய்தால்தான் அவர் மானம் பிழைக்கும்; அவர் பிழைப்பார்; நானும் பிழைப்பேன். அவர் என் உயிர்த் துணைவர். என்னை அவர் உதாசினம் செய்தாலும், அவர்தானே என் உயிர்த் துடிப்பு. நான் பெண்!

கோமதி"

கடிதத்தைப் படித்து முடித்த ரேணுகாவுக்குக் காலடியில் சுழன்ற பூமி நிலைதப்பிவிட்டது போன்று இருந்தது. அவள் உள்ளத்தில் மின்னலென ஓர் ஒளி தோன்றியது. வாழ்க்கையின் உண்மையை அவள் உணர்ந்தாள்.

'ஐயோ! புறஅழகில் மயங்கித் திரிந்த என்னை இதுவரை என்

கண்களைமறைத்துவிட்டனவே. அழகு, அழகு என்றெண்ணிய அத்தான் கடைசியில் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? அக்காளுக்குத்தான் பாவம், அவரால் எத்தனை சஞ்சலம்! ஆனால்...'இவர்'—என் கணவர் எவ்வளவு பொறுமைசாலி! அவரது தூய அன்பிற்கு—உள்ளத்தின் அழகுக்கு—இந்த உலகமே ஈடாகாதே. இன்று வரை அவரது எல்லையற்ற கருணையை அறியாமல் போனேன். பலமுறை அவரது அன்பை அலட்சியம் செய்தும், இன்னும் என்னிடம் இரக்கங் காட்டுகிறாரே! 'வா, வா' என்று வருந்தியழைக்கும் அவருடைய ஆதரவுப் பார்வையில்தான் எவ்வளவு ஏக்கம் பிரதிபலிக்கும்? ஆம்; நான் குற்றவாளி. இவ்வளவு தூரம் அவரிடம் பாராமுகமாக நான் நடந்ததற்கு அத்தானைப்போலிருந்தால் என்றோ என்னை உதறித் தள்ளிவிட்டிருப்பாரே! என் துணைவரின் பெருந்தன்மைக்கு இதைத் தவிர வேறு சாட்சியம் எதற்கு? ஆம்; பார்க்கப் பளபளக்கும் காகிதப்பூ என்றுதான் நான் வாழ்க்கையை மதிப்பிட்டேன். உள்ளத்தை உணரவைக்கும் உண்மைப் பூ வாழ்க்கை என்பதை இப்போதுதான் புரிந்துகொண்டேன்...'

அவள் சுடர்விடும் விழிகளில் கண்ணீர் ஓடி வழிந்தது.

தன் கணவரிடம் மன்னிப்புப் பெற்று, அவர் பாதங்களைக் கண்ணீரால் கழுவினால்தான் அமைதி உண்டாகும் என்று ரேணுகா முகுந்தனின் அறைக்குள் ஓடினாள். ஆனால் அவர் அங்கில்லை. மேஜை மீது வைத்திருந்த உறையிட்ட கடிதத்தில் நிலைத்தது அவள் பார்வை. அவளுக்குத்தான் அந்தக் கடிதம் காத்திருந்தது.

"பிரிய ரேணுகா,

உன் இந்த விபரீதமான நிலைமாறி, என்று உன்னை உணர்ந்து என்னை அடைய வேண்டுமென்று உன் மனம் சொல்கிறதோ, அன்று என் வீடு தேடி வா. என் இரு கைகளையும் ஏந்தி மனப்பூர்வமாக உன்னை ஏற்றுக் கொள்ளுகிறேன். யுகயுகாந்தரமானாலும் அதுவரை உன் நினைவு ஒன்றே என் துடிப்பு. நீ என் உயிர்த்துணை. வாழ்க்கை விதி அப்படி!

முகுந்தன்"

தன் கணவரை நேரில் தரிசித்தால்தான் அவளுக்கு உயிர் உடலில் நிலைக்கும் என்றாகவே, 'விர்'ரென்று வெளியே பாய்ந்தாள். கார் புறப்படத் தயாராக நின்றது. தந்தையுடன் நின்ற தன் துணைவரைக் கண்டதும் ரேணுகாவுக்கு மகிழ்ச்சி அணை மீறியது. மறுபிறவி பெற்றவளைப் போலப் பூரித்தாள். அப்படியே ஓடிப்போய் முகுந்தனின் பாதங்களில் சுருண்டு விழுந்து தேம்புவதைத் தவிர, அச்சமயம் ரேணுகாவுக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

‘தமிழேந்தி’

# என் மதிப்புரைகள்

## வளரும் இலக்கியம்

“…செல்வர்களே, இரங்குங்கள்!…உங்களுக்கே நீங்கள் இரங்குங்கள்! பொது மக்கள் விழித்துக்கொண்டு தமது உரிமையைப் பெறும் காலம் வருகிறது! அரியணைகள் ஆட்டங்கொடுக்கின்றன; முடிகள் சாய்கின்றன! மனித சமுதாய மரத்தின் ஆணி வேர் உழைப்பாளிகள்! அதில் மலர்போல நீங்கள் செல்வப் புன்னகை புரிகிறீர்கள். அந்த வேர் வாடினால், உங்கள் மலர் நகையும் வாடும்; கவனம்! சமுதாயக் கப்பல் உங்கள் அட்டூழியச் சுமையால் மூழ்கிக் கொண்டிருக்கிறது; நீங்களும் அதனோடு மூழ்க நேரிடும்; உஷார்!…”—தொந்தியாடாமல் உண்டுகொழுக்கும் சோம்பேறிச் செல்வர்களின் செருக்கை—திமிரை—சொகுசுத்தனத்தை—வெகுண்டெழுந்து வீறிட்டுக் கிளம்பி, சீறிப் பாய்ந்து ‘சாடு சாடு’ என்று, ஓயாமல் ஒழியாமல் தம் புரட்சி எழுத்தால் சாடிச் சாய்த்தொழித்த அறிஞர் விக்தர் ஹியூகோவின், புரட்சித் தத்துவங்கள் நிறைந்த லோம்கிரி என்ற இலக்கிய நூலில் என்னுள்ளத்தை மொய்க்கவிட்டிருந்தேன். படிக்கப் படிக்க என் உடல்—உயிர்—இரண்டிலும் புத்துணர்ச்சிகள் ஆர்த்தெழுந்தன.

‘…பிரபுக்கள் கொல்லென்று சிரித்தார்கள்!…’—மேலும் படிப்பதற்குள், அறையின் வாசலிலிருந்து ஓர் இனிய வேண்டுகோள் :

“வரலாமோ?…”—அந்தக் குயிலின் குரலிலே குறும்புத்தனமும், குதூகலமும் கும்மாளியிட்டன. படிப்பதைச் சற்றே நிறுத்திக்கொண்டு நிமிர்ந்து பார்த்தேன். அவள்தான்—எதிர்வீட்டுத் தோழி பூங்கோதை.

“வருக! வருக! வருக!……தங்கள் வருகை தமிழினும் இனிக்க!…”—சிரிப்பு மணக்க, சிந்தை மலர, ‘விக்தர் ஹியூகோ’வைச் சற்றே மறந்து, எனக்கு நெஞ்சுருக்கி நோயைத் தந்த வஞ்சிக் கொடியாளை வரவேற்றேன்.

அவள் வந்தாள்.

“…இன்று மாலை அவசரமாக நான்கு மணி வண்டிக்கு, என் அத்தை ஊருக்குப் போகிறேன்…”

“ஆ!…”—நான் திடுக்கிட்டேன்!

"ஒரு வாரத்திற்குள் திரும்பிவிடுவேனே!"

"ஒரு வாரமா?..."—ஆயாசம் மேலிட்டது எனக்கு.

"ஏன் ஆயாசப்படுகிறீர்கள்? ஒப்பாரி எதுவும் வேண்டாம். போகவிருக்கும் அந்த ஊரோ, சரியான முதல் நம்பர் பட்டிக்காடாம்! பொழுது போக மிகவும் சிரமப்படவேண்டும் போலிருக்கிறது. ஆகவே..."

"ஆகவே?..." எனது கேள்வியில் உயிர் இல்லை!

"...ம்...நாவல்கள் வேண்டும்......மறுபடியும் பத்திரமாய்த் திருப்பி..."

"ஆகா! அதற்கென்ன, என் வாழ்விற்கு நிரம்பவும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டுவிட்ட 'அது'வே என்னை விட்டுப் பிரியும்போது..."—மனம் சூம்பிச் சுருகி வாக்கியத்தை முடிக்காமல் இழுத்து வலித்துக்கொண்டே, எனது புத்தக அலமாரியண்டை போனேன்; அலமாரியைத் திறந்து ஒரு கட்டுப் புத்தகங்களை வாரிக் கொணர்ந்து அவளெதிரில் மேஜையின்மீது போட்டேன். ஆவலும், ஆசையும் தம் மலர்விழிகளில் மின்னவிட ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

நான் மௌனமாக நின்றேன்.

"சோகச் சுழல் என்ற இந்நாவல்..." என்பதோடு வாய்க்குப் பூட்டிட்டுக்கொண்டு 'நன்றாக இருக்குமா?' என்று தம் காந்தக் கண்களால் என்னை மனமோகனமாய்க் கேட்டாள்.

என் உள்ளத்தில் சுழிந்து பரந்த உணர்ச்சிச் சுழலை அடக்கிக் கொண்டு, அவளின் கேள்விக்கு நிதான புத்தியுடன் பதில் அளித்தேன்.

"அழகிய பெண் சிலைக்கு ஆண் வேடம் தரித்ததைப் போலிருக்கிறது, இந்த இரண்டுங் கெட்டான் நாவல்!"

"அப்படியென்றால்... ?"

"முதலில் நாடகமாக எழுதி, அதே நாடக வசனங்களைக் கொண்டு மறுபடியும் நாவலாக உருமாற்றப்பெற்றிருக்கிறது. நல்ல கருத்துக்கள் உயிரோட்டமின்றிச் செத்துப் புரையோடிப் போயிருக்கின்றன."


**சோகச் சுழல்**

சி. பி. சிற்றரசு

விலை எட்டணா

இராஜன் பதிப்பகம்

மேட்டுப்பாளையம்


"அப்படியென்றால் இது வேண்டாம்!" என்று அந்தச் சோகச் சுழலை ஒதுக்கிவிட்டு, மற்றொரு நாவலை எடுத்தாள். அந்தக் குறு நாவலின் தலைப்புப் பெயரைக் கண்டதும், புன்முறுவல் பூக்க என்னைச் சாடையாகப் பார்த்தாள் பூங்கோதை.

நானும் பார்த்தேன்.

'காதலி தேவை'—இந்தப் பெயரைத் தாங்கிய அந்தச் 'சீஸன் நாவலை'ப்பற்றியும் அவள் கேட்டாள். நான் சொன்னேன்...

"நல்ல கருத்துக்கள் கொந்தளித்துக் குமுறும் சிறப்பான நாவல்தான். ஆனால்..."

"யாரோ, எவனோ ஒருவன் எழுதும் கோர நடையிலே பெரு மோகங் கொண்டிருப்பதைத் தொலைத்துவிட்டு, குரூரமின்றி, எளிமையாக எழுத ஆரம்பித்தால், இந்த நாவலாசிரியரை எந்த 'மாப்பஸான்' ஆனாலும் மிஞ்சிவிட முடியாது! நல்ல அருமையான கதை. படித்துப் பார்."


**காதலி தேவை**

'சித்தார்த்தன்'

விலை எட்டணு

வைகறை வெளியீடு

திருப்பாதிரிப்புலியூர்


"சபாஷ்! தயவு, தாட்சண்யமின்றி மதிப்புரை வழங்குகிறீர்களே!" என்று புன்னகை செய்துகொண்டே, 'காதலி தேவை'யை ஒரு பக்கமாக வைத்துவிட்டு வேறொரு நாவலை எடுத்தாள். அந் நாவலின் அட்டைப்பட அழகிலே அவள் மயங்கிவிட்டாளோ, என்னவோ?

சில விநாடிகள் பதுமையாய்க் கிடந்தபின், அவள் கேட்டாள்: "இந்த நாவல்?"

"ஓ... நினைவுச் சுழலா? இந் நாவலில் நல்ல கருத்துச் சுழலிருக்கிறது. ஆனால், ஆரம்பத்திலிருந்து 'முடியாது!' என்று முடியும் கடைசி வார்த்தை வரைக்கும் சுழன்றோடும் புதுப் போக்கில் செந்தேனை அள்ளித் தெளிக்கிறது. இப்பேர்ப்பெற்ற 'நினைவுச் சுழல்' ஐந்தாம் பக்கத் தலைப்பில் 'சிந்தனைச் சுழல்' ஆக மாறிப் படிக்கப்போகிறவன்—போகிறவள்—உள்ளத்தை ஒரு சுழற்றுச் சுழற்றிவிடுகிறது. ஆனாலும், இந்த ஒரு சுழலுக்காகத் தந்துள்ள இரண்டாம் பக்கத்து விளக்கம் அந்தச் சுழலிலிருந்து தப்பித்துக்கொள்ளக் கைகொடுக்கிறது. மற்றபடி—கதை கட்டிக் கரும்புதான். கதைப்போக்கும், நடைப்போக்கும் காண்டேகர் கூடக் கைப்பற்றும் அளவுக்குச் சிறப்பாக, காந்தத் தன்மையுடன் அமைந்திருக்கின்றன."


**நினைவுச் சுழல்**

ஆசைத்தம்பி

விலை 12 அணு

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை—1

"ஹூம்! அவ்வளவு பிரமாதமா!..." என்று அந்நாவலையும் பேராவலுடன் எடுத்துக்கொண்டு மற்றொரு நாவலை எடுத்தாள், என் மோகினிப் பாவை.

"இது எப்படி?" என்று அவள் கேட்காத முன்னமேயே அந் நாவலைப்பற்றி நானே சொல்ல ஆரம்பித்துவிட்டேன்.


**தியாகச் சுடர்**
ஆசைத்தம்பி
விலை அணு 12
பாரி நிலயம்
59, பிராட்வே, சென்னை


"தியாகச்சுடர் என்ற இந்நாவலும், நினைவுச் சுழலை எழுதிய அதே குணச்சித்திர ஆசிரியர் எழுதியதுதான். இந்த நாவலின் ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது அத்தியாயங்கள் மூன்றும், தென்னாட்டு இலக்கியத் துறையில் புகழொளி வீசிப் பிரகாசிக்கும் சிறப்புத்தன்மைபெற்றவை, மகோன்னதமானவை! என்னதான் மாட்டுப்பெட்டி ஆட்சியிலே மந்திரியாக இருந்தாலும், நீதி நியாயத்துடன் ஓமந்தூரார் பணியாற்றவில்லையா? அதேபோல, காமாந்தகாரத்தின் குரூர ஆட்சியில், இந்நாவலின் வில்லனை லோகநாதன் ஆட்பட்டிருந்தாலும் கடைசியில், தன் சிந்தனைக்கு வேலைதந்து தன் தோழனுக்காகவும் தன் இளம் வாழ்வைத் தியாகத்தன்மையுடன் அர்ப்பணம்செய்து சிறப்படைந்து விடுகிறான். நல்ல மனோதத்துவ நாவல்!"

"உம்..."—தன் காந்தக் கடைக்கண் பணியிலே என்னை மயக்கியடித்துவிட்டு, இன்னொரு நாவலை எடுத்தாள்.

ஆத்திரத்தின் மெல்லிய கறை என் உள்ளத்தில் இலேசாகப் படிந்தது.

"தேர்ந்தெடுத்துக்கொண்ட வரைக்கும் எடுத்துப்போயேன். பொழுதுபோக்க இத்தனை நாவல்கள் போதாதாக்கும்?"

"உஷ்!... தங்கியிருக்கப்போவது ஒருவாரம். அதாவது, ஏழு நாட்கள்! ஞாபகமிருக்கட்டும்!"—அவள் என்னைப் பயமுறுத்தினாளா? எச்சரித்தாளா?...

எனக்குத் தெரியவில்லை!

"ஆமாம், இந்த நாவல் எப்படி?"—அவள் கேள்வியைக் கேட்டு நான் ஆயாசத்துடன் நெட்டுயிர்த்துவிட்டுச் சொன்னேன்.

"காதல் கொலை வழக்கு என்ற இந்தப் புத்தகம் 'அப்டுடேட் கண்ணாவி'க் காதல் கதையல்ல; கற்பனைக் கதையுமல்ல; பம்பாய், லாகூர், ஃபிரான்சு—இம்மூன்று இடங்களிலும் உண்மையாக நடந்த பயங்கரமான—பிரபலமான—மூன்று கொலை வழக்குகளின்—கற்பனைக்

## காதல் கொலை வழக்கு
எஸ். எஸ். மாரிசாமி

விலை ஒரு ரூபாய்

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை—1

கதைகளை விடப் பன்மடங்கு இனிக்கும்– சுவையான சாரம். இப்புத்தகத்திலுள்ள முதல் வழக்கும், மூன்றாவது வழக்கும் படித்தபின் மறக்க இயலாதவை. இந்த அருமையான புத்த கத்தை, இன்றைய ஆட்சி யாளருக்கு ஒவ்வொரு பிரதி அனுப்பி வைத்துக் கட்டாய மாக அவர்களைப் படிக்கவைத்து விட்டால் ரிரம்பவும் நல்லதாக விருக்கும்.''

"ஏன் ?..."

"ஏனா ?...நன்றாகக் கேட்டாய் போ! துடுக்குத்தனம் படைத்த தூரத்மாக்களும், துரைத்தனங்களும் அடுக்கடுக்காகச் சாய்ந் தொழிந்துபோன நீதியின் வெற்றிப் பரணியை அல்லவா முழக்கு கிறது இந்தப் புத்தகம் !"

"ம்... இதெல்லாம் வீண்!" என்று சொல்லிவிட்டு இதுவரை தேர்ந்தெடுத்த நாவல்களை எல்லாம் அடுக்க ஆரம்பித்தாள் பூங்கோதை.

"ஆமாம்; நீ ஒரு நாளைக்கு ஒன்பது 'சிவகாமியின் சபத'த்தை ஏப்பம் விடுவாயே! இதுகள் உனக்கு எந்த மூலைக்கு?"

"ஹுக்கும், உங்களுக்குக் கேலிதான்!"

"இந்தா, இதையும் எடுத்துக்கொள்"

"அது என்ன நாவல்? யார் எழுதியது? இவ்வளவு பெரிதாக இருக்கிறதே. தலைவலிமருந்து அவசியப்படாதே!" அவள் பேச்சில் பரபரப்பு காணப்பட்டது. நான் மேஜை அறையிலிருந்து இரண்டு நாவல்களில் ஒன்றை அவளிடம் கொடுத்தேன். அவள் அதை வாங்கி, அதன் பெயரைப் படித்தாள்.

"துரோகி என்ற இப் பெரு நாவல், தித்திக்கும் தீஞ்சுவை எழுத்தாளராகிய அன்பர் தில்லை வில்லாளன் எழுதியது; உன் அன்புக்குரிய ஏடான 'பொன்னி' யில் வளர்கதை யாகப் பிறந்து வளர்ந்து பெரும் புகழுடன் திகழ்ந்தது." மேலும் சொல்வதற்குள் அவள் சட் டென்று குறுக்கிட்டாள்.

## துரோகி
தில்லை வில்லாளன்

விலை ரூபாய் 2

திராவிடன் பதிப்பகம்
வேலூர் N.A.

"கொல்லர் வீதியில் ஊசி விற்காதீர்கள். அந் நாவலை இப்படிக் கொடுங்கள்" என்று பெருமகிழ்ச்சியுடன் என்னிடமிருந்த 'துரோகி' யை வெடுக்கென்றுபிடுங்கிக்கொண்டாள், 'பொன்முடி' யான என் உயிரை வாட்டிவதைக்க வேற்றாருக்கு என்னைப் பிரிந்து செல்லப்போகும் எனதருமைப் பூங்கோதை. நாவல்களையெல்லாம் காலேஜ் மாணவி 'ஸ்டைய்லில்' எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு மெல்ல நிமிர்ந்து நன்றிமணக்க என்னைப் பார்த்தாள். அவள் பவள இதழின் கோடியிலே புன்னகை குமிழியிட்டது. என் உள்ளத்தின் அடிப்பாங்கிலே ஏக்கம்—கவலை—குறுகுறுத்தன.

ஐயோ! அவள் என்னைப் பிரிந்து போகிறாளே!...

"போகிறாயா பூங்கோதை!"—தொண்டையில் 'களக்' கென்று ஏதோ ஒன்று எங்கிருந்தோ வந்து அடைத்துக்கொண்டது.

அது துக்கச் சுருணையோ?...

"பூங்கோதை! இந்தா, உன்னுடைய பிரிவை நினைத்து என் இதயம் படும் பேரவதியைப் பிரதிபலிக்கும் இந்த நாவலை இலக்கியத்திற்கு இலக்கணம் கற்பிக்கும் இந்த மகோன்னத சிருஷ்டியை—மேனாட்டில் பிறந்திருந்தால், கோடி 'ஷேக்ஸ்பியர்'களுக்கு ஒப்பாக விளங்கும் கலைஞானம் பெற்றும், ரசிகத்தனமற்ற—நன்றிகெட்ட இந்தத் தமிழகத்தில் தவறிப் பிறந்துவிட்ட ஒரே ஒரு குற்றத்திற்காக, ஒளி மங்கிக்கிடக்கும்—கலைப் பிரம்மாவின் உயிரோவியத்தைப் படி" ... மேலும் பேச எண்ணினேன்; முடியவில்லை. என் கண்களும், கருத்தும், பொங்கிப்பிரவகித்த துயர அலைகளின் மோதுதலினால் திணறித் தடுமாறின.


**துணைப் பறவை**

'சுகி'

விலை ஒரு ரூபாய்

கதைவனம்

புதுக்கோட்டை


ஏனிந்த வேதனைத் திணறல்?

என்னைப் பிரிந்து செல்லும் காதலிக்கு ஆகவா? அல்லது, 'துணைப்பறவை' யைச் சிருட்டித்த தூய கலைஞனின் துரதிருட்டத்தை நினைத்தா?...

இரண்டிற்குந்தான்!

ஆனால்—அவள், தன் பிரிவிற்காக மட்டுந்தான் நான் மனங்கலங்கினேன் என்று ஒருமை மனப்பான்மையுடன் நினைத்துக்கொண்டு "இதற்காகவா இப்படி? நன்றாகத்தானிருக்கிறது...நான் எங்கே போய்விடப்போகிறேன்?...இந்தப் பேதை என்றென்றும் உங்களுடையவள்தானே?..." அவளும் தன் கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"போய்வரட்டுமா?..."—இனிக்கும் குரல்கேட்டுத் திடுக்கிட்டு உணர்வடைந்தேன்.

"போய் வரட்டுமா?"—கண்ணால் பணிந்து, கருத்தால் வணங்கிக் கேட்டாள் அவள், மீண்டும் ஒருதடவை.

"உம், போய் வா பூங்கோதை" தாவியணைத்தேன்.

'இச்'—இன்பத்தின் ஒலி!

அவள் போய்விட்டாள். நான்...? அவள் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற எனக்கும், மாமல்லபுரத்துச் சிலைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படி நினைத்தால்—அது தப்பு!

வரப்பெற்றோம்;

ஜீவயாத்திரை: ஆசிரியர்: மதிவாணன். விலை எட்டணா. வைகறை வெளியீடு, திருப்பாதிரிப்புலியூர்.

சுந்தரவதனி: ஆசிரியர்: மருதூர், ஏ. பிரபாகர சாஸ்திரி B.A. விலை ஒன்றரை ரூபாய். ஸ்ரீ வாணிவிலாசம் பிரஸ் வெளியீடு, திருப்பாதிரிப்புலியூர்.


இனம்! இனம்!!

## உல்லன் போர்வை

அசல் கம்பளத்தால் நெய்யப்பட்ட 10,000 இங்கிலாந்து உல்லன் போர்வைகளை மிகக் குறைந்த விலைக்குத் தருகிறோம். இது லாட்டரியுமல்ல; சூதாட்டமும் அல்ல; பகுத்தறிவுப் போட்டியுமல்ல. எங்கள் போர்வை எல்லோருக்கும கிடைக்கும். எங்கள் கம்பெனியின் திட்டத்தைப் பிரபலப்படுத்துவதற்காக ஒரு உல்லன் போர்வை விலை ரூ. 2—8—0 என்று வைத்திருக்கிறோம். இன்றே எழுதுங்கள். இனமாகக் கேட்லாக்கும் விபரமும் அனுப்பப்படும்.

FREEMAN WATCH COMPANY
NIKAD WADI LANE (PM)
BOMBAY-4.

## ஏஜண்டுகள் தேவை!

புதுமாதிரியான எங்கள் பௌண்டன் பேனாக்களை விற்பனை செய்ய மாதம் ரூ. 300 முதல் ரூ. 500 வரை சம்பளத்திற்கோ, அல்லது கமிஷனுக்கோ ஏஜண்டுகள் தேவை. மாதிரிகளுக்கும், விபரங்களுக்கும் இன்றே எழுதுங்கள்.

★

LAWRENCE BROTHERS (PM)
NAGDEVI :: BOMBAY-3.



*Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam. 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.*



197807.



தாய், தங்கை. அண்ணன் !

— 'அந்தமான்கைதி'யில் இப்படியொருகாட்சி !



ஆழ்ந்த யோசனை போலும் !

— 'ராணி'யில் பாலசந்தர் இப்படி வருகிறார் !

பிப்ரவரி 9உ முதல்

சென்னை காஸினோ — பிரபாத — ஸரஸ்வதி

மற்றும் எல்லா முக்கிய இடங்களிலும்

# தாய் உள்ளம்



அன்பிற் சிறந்தது தாய் உள்ளம்

# தாய் உள்ளம்



படத்தில் உயர்ந்தது தாய் உள்ளம்

டைரக்ஷன்....ராம்நாத்

நாராயணன் கம்பெனி தயாரிப்பு..... ஸ்டுடியோ... வாஹினி